# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| | | |
|---|---|---|
| மாலை 1 | ஞாயிறு 27-11-38 வெகுதான்யஹு கார்த்திகைமீ 12உ | முத்து 9 |

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. காங்கிரஸ் சாதித்தது என்ன? | .... | 194 |
| 2. குறிப்பு | ... | 196 |
| 3. போகிற போக்கில் | ... | 198 |
| 4. துணுக்குகள் | ... | 200 |
| 5. மதுவிலக்கு பரிபூரணவெற்றி (ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி, பி.ஏ.) | | 201 |
| 6. கிராமப் புனருத்தாரணம் (ஸ்ரீ ரா. குஞ்சிதபாதம்) | ... | 204 |
| 7. சமுதாய வாழ்க்கை | ... | 205 |
| 8. புத்திசாலிப் பிள்ளையாண்டான் (ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார்) | | 207 |
| 9. நத்தைக்குடம் (ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி) | ... | 209 |
| 10. கோபம் வருமா, வராதா? (ஸ்ரீ. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி) | ... | 211 |
| 11. பாமாவின் கடிதம் (ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாள்) | ... | 213 |
| 12. வலை வீச்சு | ... | 214 |
| 13. அந்திவானம் (கவிதை) (ஸ்ரீ கு. பா. வெங்கடாசலம்) | ... | 215 |
| 14. எதிரொலி | ... | 216 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# காங்கிரஸ் சாதித்தது என்ன?

காங்கிரஸ் பதவி ஏற்ற பிறகு ஐந்தாவது முறையாக சென்னை சட்ட சபை நாளைக்குக் கூடுகிறது. காங்கிரஸ் பதவிக்கு வந்து ஒரு வருஷம் நான்கு மாதங்கள் ஆகின்றன. காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கண்டபடி சென்னை சர்க்கார் என்னென்ன காரியம் செய்து முடித்திருக்கிறார்கள், என்னென்ன செய்ய வேண்டியதிருக்கிறது என்பதை ஆராய்ச்சி செய்வதற்கு இது ஒரு நல்ல தருணம்.

காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியே ஆங்கிலத்தில் ஒரு சிறு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள்; சமீபத்தில் ஸ்ரீ வ. ரா. வும் "ஆண்டு நிறைவு" * என்று ஒரு வருஷ காங்கிரஸ் ஆட்சியை விமரிசனம் செய்து ஒரு சிறு புத்தகம் எழுதியிருக்கிறார்.

காங்கிரஸ் சாதித்திருப்பதை தனது இணையற்ற நடையில், வ. ரா. ஒரு கதை போலச் சொல்லுகிறார். பன்னிரண்டு பொறுக்குமணிகள் சேர்ந்து மந்திரி சபையானதே காங்கிரஸ் சாதித்த முதல் அற்புதம் என்று கருதுபவர் போல வ. ரா. மந்திரிகளின் குணாதிசயங்களை திறமையுடன் ஆராய்ச்சி செய்கிறார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கைப்படியும், 1931-ம் வருஷத்திய கராச்சித் தீர்மானப்படியும், 28-2-37ல் வர்தாவில் காரியக் கமிட்டி இட்ட ஆக்ஞைகள் படியும் காங்கிரஸ் மந்திரிகள் பின்வரும் விஷயங்களில் முக்கியமாக உடனே கவனம் செலுத்த வேண்டும்.

(1) நில வரியையும் மேல்வாரத் தீர்வையையும் வெகுவாகக் குறைக்க வேண்டும். (2) ஓரளவுக்கு மேற்பட்ட விவசாய வருமானத்திற்கு விகிதாசாரமாக வருமான வரி விதிக்க வேண்டும். (3) குத்தகைபாத்தியதையை நிரந்தரமாக்கவேண்டும். (4) விவசாயக் கடன்கள், நிலவரி, மேல்வார பாக்கிகளில் விவசாயிகளுக்கு வஜா செய்து கொடுக்கவேண்டும். (5) அடக்கு முறைச் சட்டங்களை எல்லாம் ரத்து செய்யவேண்டும். (6) அரசியல் கைதிகள், பந்தோபஸ்துக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். (7) ஒத்துழையாமை இயக்க காலத்தில் ஜப்தி செய்யப்பட்ட சொத்து நிலபலங்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டும். (8) சம்பளம் குறையாமல் தொழிலாளிக்கு 8 மணி நேரவேலை விகிதம் ஏற்பட வேண்டும். (9) மது விலக்கு ஏற்படுத்த வேண்டும். (10) வேலையில்லாமையைக் குறைக்க வேண்டும். (11) உயர்ந்த சம்பளங்கள், அலவன்ஸுகள், சர்க்கார் செலவு முதலியவைகளைக் குறைக்க வேண்டும்.

மேலே கண்ட இவ்வளவு அம்சங்களிலும் காங்கிரஸ் சர்க்கார், சென்னையில், எவ்வளவு துரிதமாகச் சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள் என்பதை வ. ரா. மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

மூன்று ஜில்லாக்களில் மது விலக்கு அமுலுககு வந்து விட்டது. கடன் நிவாரணச் சட்டம் நடை முதலுக்கு வந்துவிட்டது. ராஜீயக்கைதிகள் எல்லோரும் விடுதலையாகிவிட்டார்கள். சட்டமறுப்புக் காலத்தில் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களும் தொகைகளும் வாபஸாகிவிட்டன. இயக்க காலத்தில் உத்தியோகத்திலிருந்து நீக்கப் பட்டவர்கள் கூட அதைத் திரும்பப் பெற்று விட்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பளங்களையும் குறைத்திருக்கிறார்கள். நிர்வாகத்தில் சிக்கனமும் ஓரளவு செய்யப்பட்டிருக்கிறது.

* ஆண்டு நிறைவு: வ. ரா. சட்ட சபை காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் மண்டபம், மவுண்டு ரோட், சென்னை. (விலை அணா 2.)

சர்க்கார் 75 லட்ச ரூபாய் நிலவரியைக் குறைத்திருக்கிறார்கள். கதர் அபிவிருத்திக்காக 2 லட்ச ரூபாய் அளித்திருக்கிறார்கள். கிராமத்தண்ணீர் வசதிக்காக 15 லட்சம் ரூபாய் நிதியொன்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய 11·24 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க 50 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மின்சார நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்ய 83.4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத் தவிர கணக்கற்ற சில்லரை அபிவிருத்திகளும் இந்த ஒரு வருஷத்திற்குள் ஏற்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் சர்க்கார் பதவி ஏற்று நிர்வாகத்தின் நிர்ப்பந்தங்களினிடையே ஒரு வருஷ காலத்திற்குள் இவ்வளவு காரியங்கள் செய்து முடிததிருப்பது ஒரு அரசியல் புதுமை யென்றே கூறலாம்.

நடக்கிற வருஷத்தில் சர்க்கார் செய்யப் போவதுதான், செய்ய வேண்டியதுதான், சென்ற வருஷத்தில் செய்ததைக் காட்டிலும் முக்கியமானது, மாகாணத்திற்குப் பிராணுதாரமானது. செய்தது மிகப்பெரிதென்றாலும், செய்யப் போவதுதான் அதை ஊர்ஜிதப்படுத்தும், பயனளிக்கச் செய்யும்.

மதுவிலக்கு வந்ததுமட்டும் போதாது; மீதம் வைக்கும் பணத்தைக் குடியானவன் முதலாகச் செய்ய அவனுக்குக் கூட்டுறவு சங்கம் மூலம் வசதி அளிக்க வேண்டும். கடன் நிவாரணச் சட்டம் வந்தது மட்டும் பிரயோஜனமே இல்லை. குடியானவன் கடன் வாங்கவும் கொடுக்கவும் உடனே வசதிகள் ஏற்படவேண்டும்; ஏனென்றால் கிராமத்தில் இனிமேல் கடன் கிடைக்காது. விவசாயமே சுணங்கிப் போகுமோ என்ற நிலைமைகூட ஏற்பட்டுவிடும். இந்த விஷயங்களில் சர்க்கார் ஏற்கனவே நடவடிக்கை யெடுத்து கூட்டுறவு இயக்கத்தைச் சீர்திருத்த யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

நிர்வாகச் சிக்கனமும் ஸ்தாபனச் சிக்கனமும் இன்னமும் அதிகமாகச் செய்யலாம். கூட்டுறவு இலாகா, விவசாய இலாகா, சுகாதார இலாகாக்களிலுள்ள ஜில்லா ஸ்தாபனங்கள் தற்காலம் தங்கள் வேலையைச் சரிவரச் செய்வதே இல்லை; ஒன்று அவர்களுக்கு வேலை சரியாகக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள், விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் தொகையைக் குறைக்க வேண்டும். ஒரு தாலூகாவிற்கு ஒருவராக இருக்கும் இந்த உத்தியோகஸ்தர்கள் ஒருவேலையும் செய்வதில்லை என்று நாம் சொன்னால் அது மிகையே ஆகாது. இவர்கள் வேலையை யெல்லாம் சேர்த்து ரெவினியூ இலாகா செய்கிறது என்பது நாம் நேரில் கண்ட அனுபவம். ஜில்லா போர்டுகள் ஒழிந்தால் மாகாணத்திற்கு க்ஷேமம், பணம் மிச்சம். ரெவினியூ இலாகாவில் டிப்டி கலெக்டர் ஆபீஸ் வேண்டியதே இல்லை; அந்த அதிகாரியை எடுத்துவிட்டு ஸ்தாபனத்தை கலெக்டர் ஆபீஸுக்கும் தாலூகா ஆபீஸுக்குமாகப் பிரித்துக் கொடுத்து விடலாம்.

கிராமப் புனருத்தாரணம் காங்கிரஸின் அடிப்படைக் கொள்கை. அதை நோக்கமாகக் கொண்டே காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகத்தைச் செப்பனிட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த சட்ட சபையில் வரப்போகும் சுகாதார மசோதா அந்த முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல் என்றே சொல்லி விடலாம்.

ஆனால் சுபிட்சம் கண்ணில் பட தொலை தூரமிருக்கிறது. முதலில் நிலவரி பளு குறைய வேண்டும். பஞ்சாயத்துகள் புத்துயிர் பெறவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் நாடெங்கும் பயிர்கள் போலத் தலை தூக்க வேண்டும். விவசாயம் உரங்கொண்டு கதிர் வாங்க வேண்டும். குடியானவன் குடிசைக்குள் அப்பொழுதுதான் கலகலப்பு உண்டாகும்.

காங்கிரஸ் சர்க்கார் இதற்கெல்லாம் பொறுப்பாளி; நாட்டின் முன் இந்த கடும் விரதத்தைக் கைக்கொண்டு நிர்வாகத்தில் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் தான் இதைச் சாதிக்க முடியும். வியாதியை அறிந்தவர் தானே வைத்தியம் செய்ய முடியும்?

குறிப்பு

# ஜில்லா போர்டுகள் வேண்டாம்!

சமீபத்தில் சேலம் ஜில்லா போர்டு ஜில்லா போர்டுகளையே எடுத்துவிட வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று. அதற்காக அதை நாம் பாராட்டுகிறோம். ஆனால் ஜில்லா போர்டுகளை ஏன் எடுத்துவிட வேண்டுமென்பதற்கு அது சொன்ன காரணங்கள் தான் நமக்கு அவ்வளவு முக்கியமாகப்படவில்லை. தேர்தல் தொல்லைகள் இருக்கலாம்; ஊழல்கள் இருக்கலாம். மாகாண சுய ஆட்சி வந்த பிறகு ஸ்தல ஸ்தாபன ஆட்சிக்குப் பயற்சிக்கூடமாக விருந்த ஜில்லா போர்டு தேவை இல்லை என்றும் ஒரு காரணம் சொல்லப்பட்டது.

ஆனால் உண்மையாக வலுவான காரணம் ஜில்லா போர்டுகள் எப்பொழுதுமே தேவையில்லை என்பது தான். ஜில்லா போர்டுகள் என்றைக்கு என்ன காரியங்களை ஒழுங்காகச்செய்து முடித்தன? அவற்றின் ஸ்தாபனச் செலவிற்கு உற்றபடி என்ன பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன? ஜில்லா போர்டின் பரிபாலனத்தி லிருக்கும் பள்ளிக்கூடங்களும், சத்திரங்களும் ரோட்டுகளும் இதர பொது நிலையங்களும் எந்த ஸ்திதியில் இருக்கின்றனவென்பது நாம் எல்லோரும் நன்கறிந்த விஷயம்.

மேலும் ஸ்தல ஸ்தாபன ஆட்சியில்கூட அது உபயோகப்படாத ஒரு அங்கம். முனிசிபாலிட்டிகளும் பஞ்சாயத்துகளும் தான் ஸ்தல ஆட்சியின் இரண்டு அங்கங்களாக இருக்க முடியும்.

ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பஞ்சாயத்துகள் முனிசிபாலிட்டிகளிடையே பிரித்துக் கொடுத்துவிட வேண்டும். அதன் வருமானத்தையும் அப்படியே விகிதாசாரப்படி கொடுத்துவிட்டால் பஞ்சாயத்துகளும் முனிசிபாலிட்டிகளும் இன்னும் நன்றாக நடக்கும்.

பல தைரியமான முன்னேற்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கும் காங்கிரஸ் சர்க்கார் தைரியமாக ஜில்லா போர்டுகளையும் எடுப்பார்களா?

## கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு இயக்கத்தின் முக்கியமான பகுதியான கூட்டுறவு பாங்கிகள் சர்க்கார் உத்தேசப்படி மக்களுக்குப் பலன் அளிக்கவில்லையென்பதும், மொத்தத்தில் இயக்கமே அந்த அம்சத்தில் பெரும் தோல்வியென்பதும் எல்லோரும் அனுபவத்தில் அறிந்த விஷயம். கிராமத்திலோ நகரத்திலோ இருக்கும் கூட்டுறவு பாங்கிகள் ஒரு சிலரின் கைக்குள் அகப்பட்டுக் கொண்டு அவர்களுக்கு மட்டும் தான் உபயோகமாக இருக்கின்றன. பொது மக்களுடைய அறியாமையும் அசிரத்தையும் மட்டும் தான் இதற்குக் காரணம் என்று செய்வதற்கில்லை. சட்டமே இன்னும் வளைந்து கொடுக்க வேண்டும். குடியானவன் எளிதில் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து பயனடையும் படியான வசதிகள் அளிக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் மற்றொரு பகுதியான கூட்டுறவு வியாபாரச் சங்கங்கள் நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகின்றன. ஓரளவு வெற்றிகரமாகவே நடைபெறுகின்றனவென்றுகூடச் சொல்லலாம்.

இந்த இரண்டு அம்சங்களையும் பிணைத்து, கிராமத்தானுக்கு அது உண்மையிலேயே ஒரு உதவியாக இருக்க வேண்டியதற்காக சர்க்கார் கூட்டுறவு சட்டத்தைத் திருத்தி யமைக்க ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் கடன் நிவாரணச் சட்டத்தின்பிறகு, விவசாயிக்குக் கடன் வசதியளித்து உதவவும், விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய வழிகள் தேடவும், சங்கங்களை நிறுவப் பொது மக்களிடத்தி லிருந்தும் பிரபலஸ்தர்களிடத்திலிருந்தும் சர்க்கார் யோசனைகள் எதிர்பார்க்கிறார்கள். அதற்காக சில கேள்விகள் தயார் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விகளுக்குக் கூடியவரையில் உபயோகமான விடைகள் அடுத்த வாரத்தில் அளிப்போம்.

இந்த வாரம் மற்றொரு பகுதியில் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி கண்டிருக்கும் ஆலோசனைகளையும் நேயர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

கேள்விகளில் சில பின் வருமாறு :—

நல்ல திறமையான வழியில் கூட்டுறவு இயக்கம் நமது மாகாணத்தில் அபிவிருத்திஅடைந்திருக்கிற தென்று நினைக்கிறீர்களா ?

குடிகளின் கடன் தொல்லையை அது நிவர்த்தி செய்ய முடிந்திருக்கிறதா? செய்திருந்தால் எவ்வளவு தூரம்? அங்கத்தினர்களுடைய பொருளாதார நிலைமையையும் நன்னடத்தையும் அது மேன்படுத்தியிருக்கிறதா ?

சமீப காலத்தில் சர்க்கார் கையாண்ட கடன் நிவாரண திட்டங்களில் இது ஏதாவது உபயோகப்பட்டிருக்கிறதா? இந்த திக்கில் எப்படி யெல்லாம் அது இன்னும் அதிகமாக ஒத்தாசை செய்யலாம் என்று நினைக்கிறீர்கள் ?

நமது மாகாணத்தில் அது நன்ருக விரிவடைவதற்கு நீங்கள் கூறும் யோசனைகள் என்ன ?

ஜமீன்தாரிப் பிராந்தியங்களிலிருக்கும் விவசாயிகளுக்கு இது எவ்வளவு தூரம் எப்படி உதவி செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள் ?

விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்களும் இதர உத்தியோகஸ்தர்களும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகத் தங்கள் வேலையைச் செய்தால் இன்னும் அதிகமாகப் பயன் அளிக்கும் என்று நினைக்கிறீர்களா? தங்கள் யோசனைகளை அதன்மூலம் இன்னும் முக்கியமான மக்களுக்குக் கூறலாமல்லவா ?

## ஆண் நர்ஸுகள் ஏன் கூடாது?


ஆஸ்பத்திரிகளில் ஆண் நர்ஸுகள் நியமிப்பதென்று சுகாதார மந்திரி செய்திருக்கும் யோசனைக்கு ஆங்கிலோ இந்தியர்கள் கிளப்பும் ஆட்சேபணைகளில் ஒன்ருவது சரியாக இல்லை. ஜாதி அபிமானம் எவ்வளவு தூரம் விவேகத்தைக்கூட தலை கிளம்பாமல் செய்யக்கூடும் என்பதற்கு அவர்கள் சமீபத்தில் செய்து பிரசங்கங்கள் ஒரு அத்தாட்சி. ஆண் நர்ஸுகள் ஆஸ்பத்திரிகளில் நடமாட ஆரம்பித்தால் வரி கொடுப்போர்கள் உயிருக்கே ஆபத்தாம்! பெண்களைப்போல ஆண்பிள்ளைகளுக்கு நர்ஸ் (சிசுருஷை) செய்யத் தெரியாதென்று முடிவாகச் சொல்கிருர்கள். ஆனல் இந்த அபிப்பிராயத்திற்கு நேர் எதிரிடையான அபிப்பிராயமும் இருக்கிறதாகத் தெரிகிறது. பல நாடுகளில் ஆண் நர்ஸுகள், மிகவும் திறமையாக வேலை செய்திருக்கிருர்களாம். எது எப்படியானுலும் பரீட்சை செய்து பார்ப்பதில் ஒன்றும் கெடுதலில்லை. தைரியமாக இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததற்காக நாம் டாக்டர் ராஜனைப் போற்றுகிருேம்.

---

## லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட்

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பதினலாவது, (1937—38) வருஷாந்திர ரிபோர்ட் அக்கம்பெனியின் முன்னேற்றத்தை நன்ருக உணர்த்துவதாகும். இடைவிடாத ஒழுங்கான முன்னேற்றத்தால் அது தன்னை மிகவும் பலப்படுத்திக் கொண்டு, இந்தியாவின் சிறந்த இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்களில் ஒன்ருக விளங்குகின்றது. ஆயுள் நிதி ஒரு கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருக்கிறது. மொத்த சொத்துக்கள் 113 லக்ஷத்திற்கு அதிகமாவே இருக்கின்றன.

கம்பெனியின் வரவு செலவு கணக்குப் படி, பொறுப்புக்கள் பகுதியில் கொடுபட்ட மூலதனம் 1·0 லக்ஷமும் ஆயுள் நிதியில் 1,10·72 லக்ஷமும் ரிஸர்வ் நிதிகளில் ரூ. 6·09 லக்ஷமும் மற்ற வகைகளில் ரூ. 37 லக்ஷமும் காணப்படுகின்றன. சொத்துப் பகுதியில் சர்க்கார் ஸெகியூரிடிகள் ரூ. 37 லக்ஷமும், சொத்து அடமானத்தில் ரூ. 28·60 லக்ஷமும், கட்டிட நில சொத்துக்களில் ரூ. 25·35 லக்ஷமும், பாலிஸி கடன்களில் ரூ. 5·92 லக்ஷமும் கையிருப்பில் ரூ. 4½ லக்ஷமும் இதர சொத்துக்கள் ரூ. 12·21 லக்ஷமுமாகச் சேர்ந்து மொத்த சொத்து ரூ. 1,13·58 லக்ஷமாகிறது. கம்பெனி முதல் போட்டிருக்கும் வழி மிகவும் பத்திரமானது; முன்னேற்ற முள்ளது. நிர்வாகஸ்தர்கள் தேவைகளை நன்ருக உணர்ந்து காரியங்களை ஆலோசனையுடன் செய்திருக்கிருர்கள். பண்டித கே. சந்தானம் மானேஜிங் ஏஜெண்டுப் பதவியிலிருந்து ராஜீனமா செய்தும் மறுபடியும் அவரை ஜெனரல் மானேஜராகச் செய்திருப்பதால் கம்பெனியின் நிர்வாக முறையில் தொடர்பும் முன்னேற்றமும் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.




சென்ற வாரம் வாக்களித்தபடி நெல்லின் நியாயமான விலையை நிதானமாய்ப் பரிசீலனை செய்யலாமென்று ஸ்நான, ஸந்தி கர்மானுஷ்டானங்களை (வால்மீகி ராமாயண பாராயணம்-அர்த்தம் நன்றாய் புரியா விட்டாலும், நாதபிரும்மத்திலேயே லயித்து மெய்மறந்து பாராயணம்) யதோக்தமாய் வழக்கத்தை விடக் கூடுதலான ஊக்கத்துடன் முடித்து விட்டு, சிவப்பழமாய் நாற்காலியில் உட்கார்ந்தேன். 'ரப்' பேபரை எடுத்துக் கிழித்து மடித்து, குண்டூசியைச் சொருகினேன். அது காகிதத்தில் சுருக்கென்று பாய்ந்தது. திடுக்கிட்டேன். விரலில் பாய்ந்து விடுமோ என்கிறபயம்மாத்திரமல்ல. வீரத் தன்மைத்தான்! காகிதத்திற்கும் வலிக்குமோ யென்கிற பயமும்தான். கைக்கு மல்லிகை புஷ்பம்போல் மழமழ வென்றிருக்கும் காகிதத்தில் குண்டூசியைக் குத்தும்போதெல்லாம், அதற்கும் உயிர் உண்டு போல் எனக்கு ஞாபகம். ஒற்றுமை உணர்ச்சி தான். ஜீவகாருண்யம்தான். தொன்று தொட்டு அஹிம்சையே குடிகொண்ட நாகரீகத்தில் பிறந்து வளர்ந்தவர்களல்லவோ நாமெல்லோரும்? இதை ஒட்டி பல யோசனைகள் அம்பு வேகமாய் நக்ஷத்திர மண்டலம் வரையில் பறந்தன. ஆனால் அவைகளை எழுத்தில் எழுதினால் புஷ்பத்தைக் கையிலெடுத்துக் கசக்கும் பாவம் உண்டு.

* * *

மணி எட்டு. காலை வேளை. தபால்காரன் வரும் சமயம். கதவைச் சாத்தித் தாப்பாளிட்டு எழுதுவது என்ற வழக்கம் உங்களுக்குத் தெரியுமே. தப்பென்ன? கவிதையும் அந்தரங்கமான ரகசிய விஷயம் தானே! ஆனால் தபால் காரன் வரும் சமயத்தில் கதவைச் சாத்தி வைக்கலாமா? மணியார்டர் தப்பி விட்டால் என்ன செய்கிறது? "பாரதமணி" அச்சுப்போட வேண்டாமா? தபால் காரனின் சோம்பலிற்கும், அலுப்பிற்கும் கொஞ்சம் கூட இடம் கொடுக்கலாமா? தவிர தபால்காரன் தானே நமது நவீன நாகரீகத்திற்கு தினசரி புத்துயிரளிக்கும் ஜீவதாது? சிறு பிராயம் முதற்கொண்டு அவனைப் பார்த்தாலே எனக்கு எப்பொழுதும் கொஞ்சம் அன்பு உண்டு—சந்திரனைக் கண்ட அலை போல். நான் சிறு வயதில் எழுதி அக்கரைக்கு அனுப்பிய பல கட்டுரைகளை அவன் திருப்பித் திருப்பிக்கொண்டு வந்து நீண்ட கவரில் கொடுத்த போதிலும், அவனிடமும் கோபமில்லை. திருப்பியனுப்பிய ஆசிரியரிடமும் தாபமில்லை. தபால்காரனைப் பார்த்தால் அன்பு மாத்திரமல்ல, கொஞ்சம் பச்சாத்தாபமும் அவனிடம் எனக்குண்டு. பிறருக்கு மணியார்டர் கொடுக்கிறானே தவிர தனக்கு ஒன்றுகூட வருத்திக்கொள்கிறதில்லையே? ஐயோ பாவம்! குக்கிராமமானால் மணியார்டருக்கு இரண்டணா கிடைக்கும். அல்லது குறைந்த பக்ஷம் ஒரு சீப்புக் கச்சை வாழைக்காய், அல்லது ஒரு கட்டு இலையாகிலும் கிடைக்கும். சென்னையில் பணம் வாங்குவோர் நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டார்களே!—தபால்காரர்கள் கனைத்துக் கொண்டாலும்!

* * *

எதிர்பார்த்த படியே காலடிச்சத்தம் கேட்டது. தபால்காரன் ஆயாசத்துடன் வந்தான். ஆறு 'பாக்கட்டுகள்' கிடைத்தன. எல்லாம் "பாரத மணி"க்கு விஷய தானங்கள். பாட்டுக்களும், கட்டுரைகளும் அமர்க்களமாயிருந்தன. வந்தனம். மணியார்டரு

மில்லை, செக்குமில்லை. குப்பல் குப்பலாய் தினசரி வரும் வெட்டித் தபாலுமில்லை. ஒரே ஒரு தபால்தான். அந்தத் தபாலின் கவரின்மேல் கைராட்டினம் பொம்மை அச்சிடப்பட்டிருந்தது. அதன் கீழ் எதிர்பாராத விளம்பரமொன்று கொட்டை எழுத்தில் அச்சிட்டிருந்தது. இதைச் செய்யுங்கள் அதைச் செய்யுங்கள் என்று வணக்கமாய்க் கூவிற்று. தமிழ் நாட்டிலும் நல்ல வார்த்தைகளைக் கேட்டு அவைகளைப் பழக்கத்திற்குக் கொண்டு வருபவர்களும் உண்டா? ஏன் இந்த வீண் பிரயாசை என்று சொல்லிக்கொண்டே கவரை உடைத்துப் பார்க்காமலே அச்சிட்ட விளம்பரத்தை வாசித்தேன்.

“கதராடையையே கட்டுங்கள்.!
கை ராட்டினம் சுற்றுங்கள்!
கைக்குத்தரிசியை சாப்பிடுங்கள்!
வெல்லமே உபயோகியுங்கள்!
மில் அரிசியும் வெள்ளை
சர்க்கரையும் ஒதுக்குங்கள்!”

ஆனந்தமாயிருந்தது. பிழைக்கும் வழிக்கும் நல்ல சுகாதார விதிக்கும் சரியான வேண்டுகோளே. நானும் இம்மாதிரி எண்ணங்களைப் பல வருஷங்களாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று மிக்க ஆசை கொண்டுதான் இப்பத்திரிகைத் தொழிலில் இறங்கியிருக்கின்றேன். இவ்விதமான நூறு சுகாதார மொழிகளை அச்சிட்டு ஒவ்வொருவர் நெற்றியிலும் ஒட்டி ஆறு மாதம் விளம்பரம் செய்தால், ஒருவேளை நூற்றுக்குப் பத்து பேரிடத்தில் இப்பொழுது குடிகொண்டிருக்கும் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள தீண்டாமை விலகும். வெகு நாளாய் இம்மாதிரி பணி செய்ய ஆவலுண்டு. மேற்படி சுகாதார சுருதி வாக்கியத்தை நாம் காரிய ரூபத்தில் பூர்த்தி செய்தால்தான் நமது தேசம் வளரும். நல்ல நடத்தையும் படியும்; மேனியும் மேலிடும். ஒத்துழைக்கும் குணங்கள் உண்டாகும். அரசியல் முறையை நன்கு கையாடலாம். கல்லும் சேரும் சரியாயிருந்தாலல்லவோ சுவர் பலப்படும்? வேகா வெரிக்கல்லையும், நன்றாய்க் குழைத்துப் பிளிக்காத சேற்றையும் வைத்துக் கட்டிடம் கட்டினால் டி. பி. டபிள்யூ அதிகாரிகள் கூடப் பரிகாசம் செய்வார்களே!

மேற்கண்ட ‘செய்யுங்களே’ன்ற குரலுக்கு அனுசரணையாகச் செய்யக் கூடாதென்கிற முறையில் நான் சில சொல்லுகிறேன் கேளுங்கள். டிராமிலும், பஸ்ஸிலும், ரயிலிலும் போகும் பொழுது உல்லாஸமாய்த் தலைமயிரை ஆத்திக்கொண்டு போகாதேயுங்கள். சிம்மாஸனத்தில் உட்காருவதுபோல் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்காராதேயுங்கள்; மூக்குச் சிந்தாதேயுங்கள்; வெற்றிலைச்சாரை வழிய விடாதேயுங்கள்; வெளியில் துப்பாதேயுங்கள்; சுருட்டுப் பிடிக்காதேயுங்கள்; மூக்குப்பொடி போடாதேயுங்கள்; ரயிலோட்டத்தை அனுபவிக்க மூக்குத் தூள் தீராத அவசியமானால் பொடியை கையிலெடுத்தவுடன் போட்டுக்கொண்டு விடுங்கள். விரலில் எடுத்து வைத்துக்கொண்டு சந்தோஷத்தில் கண்கொட்டி அரை மணி நேரம் பக்கத்திலிருக்கும் எங்களைத் திணற விடவேண்டாம். இந்த வார அனுஷ்டானத்திற்கு இது போதுமென்று நினைக்கிறேன்.

மேலே சொன்ன ரசமான கவர் எவரிடமிருந்து வந்ததென்று நான் உங்களுக்குச் சொல்லப்போகிறதில்லை. அதற்குள் என்ன எழுதியிருந்ததென்றும் சொல்லப் போகிறதில்லை. ஆனால் அதை அனுப்பினவர் என் மதிப்பில் வட இந்தியாவிற்கு பாபு ராஜேந்திரபிரசாத் எப்படியோ அப்படியே தென் இந்தியாவிற்கு இவரும். ‘தான்’ என்கிற பாவத்தையே மறந்த ஓர் உத்தமன். நமது சுயராஜ்யக் கட்டடத்தில், கண்ணுக்குத் தெரியாமல் அஸ்திவாரத்தில் கிடக்கும் பாறைக் கற்களில் அவர் ஒன்று.

சுகாதார மசோதா வருவதற்கு முந்தியே அதில் நான் ஒரு ஏக்கம் பிடித்தவன். இப்பொழுது கேட்கவேண்டுமா? ஏக்கத்தில், நியாயமான நெல் விலை நிர்ணயத்தை மறந்து விட்டேன். போகட்டும். மன்னிக்கவேண்டும். பொருளாதார விக்ஞான சாஸ்திரத்தை, ஜோஸ்யம் போல், ஆர அமரத்தான் சாந்தமாய் ஆராய்ச்சிசெய்ய வேண்டும். நாம் அவசரபடவேண்டாம். தவிர, நமது ஆராய்ச்சிக்கும் நெல் விலைக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. கரையில் உட்கார்ந்துகொண்டு மீன் பிடிக்கிறவனின் தூண்டில் முள்ளில் மீன் அகப்பட்டாலும், அகப்படாமற் போனாலும் ஆற்று வெள்ளம்புரண்டு போவதுபோல்.

—மணி.

# துணுக்குகள்

## மில் அரிசியில் ஒன்றுமே இல்லை!

புறாக்களுக்கு மில் அரிசியையும் கைக்குத்து அரிசியையும் ஆகாரமாகக் கொடுத்து அவ்விரண்டின் ஆகார சத்தையும் பரிட்சை செய்து பார்த்தார்கள். கைக்குத்து அரிசி உண்ட புறாக்களெல்லாம் எடை அதிகரித்து புஷ்டியாய் விட்டனவாம்; மில் அரிசி உண்ட புறாக்கள் எடை குறைந்து சாகும் தருவாய்க்கு வந்துவிட்டனவாம். பல ரகமாகத் தீட்டப்பட்ட அரிசிகளையும் புறாக்களுக்கு உணவாகக் கொடுத்துப் பார்த்தார்களாம். தீட்டாத மில் அரிசியைக் கொடுத்ததில் கொஞ்சம் 'சுமாராக' இருந்தனவாம்; கால்வாசி தீட்டின அரிசி உண்ட புறாக்களும் அரை வாசி தீட்டின அரிசி உண்டவைகளும் எடை ஏறினபோதிலும் சில இறந்துபோயினவாம். நன்ருகத் தீட்டப்பட்ட அரிசியை உண்ட புறாக்கள் எல்லாம் எடை குறைந்து வியாதியடைந்து இறந்துபோய்விட்டன. தற்காலம் மார்க்கெட்டில் விற்கும் அரிசி அது தான்!

நாம் அரிசியுடன் பருப்பும் மோரும் சேர்த்துக் கொள்வதால்தான் பிழைத்திருக்கிருேமாம்!

## சரித்திரபூர்வமான ஆபரணம்

சமீபத்தில் கள்ளிக்கோட்டை உதவி ஜட்ஜ் ஸாமோரின் குடும்பத்தைச் சேர்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற வைரங்களை ஏலம் போட்டார். அந்த வைரங்களில் ஒன்று மலையாளத்தில் கூறப்படும் ''பாதக்கமலம்'' என்பது. வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுகீசியர் கள்ளிக்கோட்டைக்கு வந்த காலத்தில் இதை அக்காலத்தில் ஸாமோரினுக்குப் பரிசாக அளித்ததாகக் கூறப்படுகிறது. இது ஒரு பழைய வாள். கைப்பிடி வைரங்களினுல் இழைக்கப்பட்டிருக்கிறது. சென்னை பிரபல வைர வியாபாரிகளான ஸூராஜ்மல்ஸ் ஏலத்தில் இதை வாங்கியிருக்கிருர்கள். 'பாதக்கமலம்' பார்ப்பதற்கு மனதைக் கொள்ளை கொள்வதாகும். ஆபரணத்தின் மத்தியில் இருக்கும் பச்சைக்கல் $1\frac{1}{2}$ அங்குல குறுக்களவுள்ளதாய் இருக்கிறது. வைரங்களில் அனுபவமுள்ளவர்கள் இதைப்பற்றிச் சிறப்பாகக் கூறுகிருர்கள். இவ்வாளின் மற்ற பாகங்கள் தூய்மையான தங்கத்தால் செய்யப்பட்டது. இந்த சரித்திரபூர்வமானஆபரணம் இதற்குள்ளேயே பலரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

## விவசாய ஆராய்ச்சி

விவசாய ஆராய்ச்சிக்காக ஏற்பட்ட மத்திய ஸ்தாபனம் தனது 1937-38-ம் வருஷ அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. பழவகை பூச்செடிகள் அபிவிருத்தி, புஞ்செய்ப் பண்ணை, பயிர்கள், மண் வயணம் சோதனை, புகையிலை, அரிசி ரகம் அபிவிருத்தி, கரும்பு சாகுபடி, பருத்திக்கொட்டை புண்ணுக்கு உற்பத்தி, பயிர் அபிவிருத்தியைப்பற்றி புள்ளி விவரங்கள் சேகரிப்பு, செய்கு விற்பனை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி சரக்கை நயத்தின்படி தரமாக்கி விலைபோட்டு நிர்ணயிப்பது முதலிய பல அம்சங்களில் ஆராய்ச்சி வேலை நடந்திருக்கிறது.

பெங்களூரில் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து 'மட்டை' என்று சொல்லப்படும் பழுப்பு, அல்லது சிகப்பு அரிசி வகைகளில் ஆகார சத்து அதிகமாக இருக்கிறதென்று தெரிகிறதாம். தீட்டாமலும் 'களையாமலும்' சமைத்தால் கோதுமையைப் போல சத்துடையனவென்றும் தெரிகிறது.

பருத்திக்கொட்டையைக் காட்டிலும் பருத்திக்கொட்டைப் புண்ணுக்கு ஒன்றரைப் பங்கு புஷ்டியானது. அதை விவசாயிகள் அதிகமாக உபயோகிப்பதற்காகப் பிரசார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தேனீ வளர்த்தல் ஒரு சிறந்த குடிசைத் தொழிலாக அபிவிருத்தியாக இடமிருக்கிறது. அதற்காக கமிட்டி பல யோசனைகள் செய்துகொண்டிருக்கிறது.

கால்நடை அபிவிருத்தி விஷயத்தில் வைசிராய் காட்டிய சிரத்தையால் அநேக முன்னேற்ற வசதிகள் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

கால்நடைத் தீவனம் விஷயமாகவும் வியாதிகள் விஷயமாகவும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

## நாம் சாப்பிட்ட பர்மா அரிசி

1936-37-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் 342162 டன் பர்மா அரிசி இறக்குமதி ஆயிற்று; 18,803 டன் நெல்லும் இறக்குமதி ஆயிற்று. 1937-38-ல் 680,998 டன் அரிசி வந்தது! 28,281 டன் நெல்லும் வந்தது!

நெல் விலையில்லை, நெல் விலை யில்லையென்ருல் எப்படி இருக்கும்?

# மதுவிலக்கு : பரிபூரண வெற்றி

(ஏ. ஜி. வேங்கடாசாரி, பி. ஏ.)

## 'அந்த அஞசாரம்'

பொன்னுக் கவுண்டன் திருப்பத்தூருக்கு ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தான். அவனுடன்கூட பல நண்பர்களும் சென்றிருந்தனர். அவர்களில் சிலருக்குப் பழைய ஞாபகம் வந்தது. சேலத்தில் தான் இல்லையே, வந்த இடத்திலாவது, 'விட்ட குறை, தொட்ட குறையாக கொஞ்சம் ருசி பார்க்கலாம்' என்ற சபலம். எனவே, பெருமாளுவும் வேடியப்பனும் "ஓலைக் கொட்டாய்"க்குப் போய்விட்டு, அப்படியே ஒரு சினிமா பார்த்துவிட்டுத் திரும்புவதென்று தீர்மானித்தனர். பொன்னுக் கவுண்டன் பழைய பேர்வழி. நாற்பது வருஷங்களாய்க் குடித்துக் குடித்து, கடன் தலைக்குமேல் போய், பண்ணை சீர்கேடுற்று, நிலத்தில் பெரும் பகுதியை இழந்த பெரிய குடித்தனக்காரன். அவன் மற்றவர்களைப் போல் அன்றாடம் காசு கொடுத்துக் கடையில் சாப்பிடுபவனல்ல. வருஷ வாரியாக முன் பணம் கொடுத்து ஆள்மூலம் வரவழைத்துக் குடித்து வந்தான். சென்ற வருஷம் மதுவிலக்கு சேலம் ஜில்லாவில் அமுலுக்கு வந்தவுடன், சில தினங்கள் வரை எதிலும் புத்தி நாடாமல் புழுவாகத் தவித்தான். மஞ்சள்ப் பெட்டியை வாயாரத் திட்டினன். ஆனால், ஒரு மாதத்தில் அவன் முற்றிலும் புதிய மனிதனுய் விட்டான். தேயிலையில் ஆரம்பித்து, காபியை பரீட்சித்துப் பார்த்து, கொத்தமல்லி விதைக் கஷாயத்தையும் உபயோகித்துப் பார்த்தபின், பால்கலந்த கேழ்வரகுக் கஞ்சிக்குச்சமம் உலகிலேயே ஒன்றும் கிடையாதென்ற திடமான முடிவுக்கு வந்தவன். "இனி அந்த அஞசாரத்தைக கண்ணெடுத்துக் கூடப் பார்க்கக்கூடாது" என்று சொல்லி, மதுவிலக்கு வந்ததற்காக 'மஞ்சள்பெட்டிக் காரர்களை' வாழ்த்தி வருகிருன். அவனுடைய நான்கு புதல்வர்களும் குடும்பத்தில் சண்டை யிராமலிருப்பது கண்டு சந்தோஷப் படுகிருர்கள்.

## சைத்தான் அழைக்கிறது

பெருமாளுவும் வேடியப்பனும், பொன்னனிடம் சென்று, "என்ன மாமா ! போயிட்டு வரலாமா?" என்று ஆரம்பித்து, என்னென்னமோ தூபதீபங்களை யெல்லாம் போட்டுப் பார்த்தார்கள். அதற்கெல்லாம் அவன் மசியவில்லை. கடைப் பக்கந்தான் சினிமா இருப்பதாகவும், அது கிருஷ்ணன் கதை யென்றும் சொல்லி, கடைக்கு வராவிட்டாலும் சினிமாவுக்காவது வரவேண்டுமென்று கேட்டனர். அவனும் சம்மதித்தான். அவர்களிருவரும் உள்ளே ஒரு மொந்தை குடித்து விட்டு, மற்ருெரு மொந்தையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். வெளியே, சற்று தூரத்தில் நாற்றம் சகிக்க மாட்டாமல், பொன்னன் மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். கடைக்கு எதிரே விற்கும் காரங்களை வாங்கித் தின்னக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. "இந்தச் சாக்கடையையா நாப்பது வருசமா குடிச்சேன்!" என்று அவன் தனக்குள் நினைத்துக் கொண்டிருக்கையில், உள்ளே யிருந்து வந்தவர்கள், "மாமா ! இந்தா, கொஞ்சம் ருசி பாக்கப் படாதா?" என்று மொந்தையை பொன்னன் வாயருகில் கொண்டு வந்தார்கள். பொன்னன் அங்கேயே வாந்தியெடுத்து விட்டான். அந்த நாற்றம் பொறுக்க முடியவில்லை. அந்த ஊரில் மேலும் தங்கினல் பழைய புத்தி ஒருக்கால் வந்துவிடுமென்று பயந்து மறுநாளே ஊருக்குத் திரும்பினுன்.

* * *

## 5 லக்ஷம் பொன்னன்கள்

இது கதையல்ல : கற்பனையுமல்ல. பொன்னனும் மற்றவர்களும் சென்ற மாதம் என்னிடம் சொன்ன விவரம். இன்று சேலம் ஜில்லாவில் குறைந்தது ஐந்து லக்ஷம் பொன்னன்களாவது இருப்பார்கள். ஊர்களைப் பாழாக்கி, சொத்துகளை நாசமாக்கி, குற்றங்களைப் பெருக்கி, சமூகத்தையே ஓட்டாண்டியாக்கி வந்த இந்தக் குடி ஒழிந்து விடுமென்று அவர்கள் கனவிலும் நினைத்ததில்லை. என்ன செய்தும் ஒழியாமல் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்து, பரவி, நிலங்களை

யெல்லாம் பிடித்துக் கொண்ட நாகதாளியை 'கொச்சினீல்' என்ற சின்னஞ்சிறு வெள்ளைப் பூச்சி வேருடன் ஒழித்துவிட்டதல்லவா? அதைப்போல் 'வெள்ளைத் துணியைக் கட்டிக்கினு இருக்கிற அந்த ரவை ஆளு கடைங்களை ஒளிச்சுப்புட்டாரு' என்று ஒரு கிராமவாசி கண்ணில் சந்தோஷம் பொங்க, நமது பிரதம மந்திரியின் செயலைப் போற்றிப் புகழ்ந்தான். "இது இப்படியே நெலெச்சிருக்குமா? இல்லே, வேறெ ஆளுங்க வந்து கடைங்களை தெரந்துவுட்டு, நிறுத்தின நாளுக்கும் சேத்துக்குடி இன்னு பண்ணிடுவாங்களோ!" என்று ஓமலூரைச் சேர்ந்த ஒரு தொண்டு கிழவர் சந்தேகம் கேட்டார். "அது ஜனங்கள் கையிலிருக்கிறது" என்றுசொல்லி நான் என் பதிலை விளக்கினேன்.

## கட்டாய முறையின் அவசியம்

"இல்லிங்க, இந்த கடைங்க இருந்தாத்தான் ஆபத்து. தனுக்குப் பண்ணற பொம்பளையைப் போல, கடை, நல்லவனையும் கெடுத்துப் பிடுது" என்று அவர் தன் முதிர்ந்த அனுபவத்திலிருந்து தெரிவித்தார். கட்டாய ஏற்பாட்டின் மூலம் குடியை ஒழிக்க முடியுமே ஒழிய, இஷ்டானுசாரம் ஒருக்காலும் இத்தகைய விஷயங்களில் பயனளிக்க முடியாது என்பதை அவர் ஒரே வாக்கியததில் சொல்லிவிட்டார்.

* * *

## வேறு சில பரீட்சைகள்

சட்டத்தின் உதவியின்றி குடியை ஒழிக்க எங்கள் சேலம் ஜில்லாவில் நடைபெற்ற முயற்சிகளை நான் அறிவேன். மகாத்மா காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை 15 வருஷங்களுக்குமுன் ஆரம்பித்தபோது, மதுவிலக்கு முக்கியமாய் முதல் தடவையாக வற்புறுத்தப்பட்டது. எப்படியாவது எங்கள் கிராமத்திலும் சுற்றுப்புற கிராமங்களிலுமாவது கடைகளை மூடிவிடும்படி செய்ய என் தகப்பனர் அரும்பாடு பட்டார். ஒரு வருஷம், நான்கைந்து கிராமங்களிலுள்ளோர் நாடு கூடி, கடையை அந்த ஊர்களுக்குப் பொதுவாக ஒருவர் பேரில் சொல்பத் தொகைக்கு எடுத்து, கலால் இலாகா அதிகாரிகளைத் திருப்தி செய்விக்க மட்டும் ஏதோ கொஞ்சம் விற்பனை செய்வதாக வெளிக்கு மாத்திரம் நடந்து கொண்டு, குடிக்க கள் இராமல் செய்து விடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், ஒரு சில விடாக் குடியர்களின் கூச்சலும், கலால் இலாகா அதிகாரிகளின் விரோத உணர்ச்சியும், சர்க்காரின் பயங்கரமான எதிர்ப்பும் அதை அசாத்தியமாக்கி விட்டன. அடுத்த வருஷம் ஒரு புதிய உபாயம் அனுஷ்டிக்கப்பட்டது. குடிப்பவர்கள் இருக்கும் குடும்பங்களுக்கு வண்ணான், நாவிதன், குயவன் போன்ற கிராம ஊழியர்களின் சேவை கிடைக்கக் கூடாதென்று, ஊரார் கூடி கட்டுச் செய்தனர். ஆனல் பிடிவாத புத்தியுள்ள குடிகாரர்கள் வேறு கிராம ஊழியர்களை ஏற்பாடு செய்யத் தொடங்கி முட்டுக்கட்டை போட்டனர். மூன்ருவது தடவையாக மிகவும் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. குடிகாரர்களுங்கூட அதற்கிசைந்தனர். அவரவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தாற்போல், வழக்கமாய்க் குடிப்போரிடமிருந்து, ரொக்கமாய் பணம் வாங்கிக் கொண்டதாக, ரூ. 100 முதல் ரூ. 500 வரை, பாண்டுகள் எழுதி வாங்கப்பட்டன. பாண்டு எழுதிக் கொடுததவர்கள் குடித்ததாகத் தெரிந்தால், ஊர் சபைகூடி விசாரித்து, அவர்கள்மீது 'தப்பு வைக்கும்'. உடனே அந்தப் பாண்டின்மீது கோர்ட்டில் தாவாப் போட்டு, தொகையை வசூலித்து ஊர்ப் பொதுப் பணத்தில் சேர்த்து விடுவதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. நான் அப்பொழுது ஏழாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். வேனிற்கால விடுமுறைக்குக் கிராமம் வந்திருந்தபோது, நூற்றுக்கணக்கில் அந்த பாண்டுகளை எழுதி குவித்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த விடுமுறைக்கு வந்தபோது, கடையில் எள் போட்டால் எள் விழாது, அவ்வளவு கூட்டம். "போன வருஷத்திய ஏற்பாடு என்னவாயிற்று?" என்று என் தகப்பனரைக் கேட்டேன். எங்கள் ஜில்லாவில் அநேகமாய் எல்லாக் கிராமங்களிலும், தமிழே முக்கிய பாஷையாயினும், தெலுங்கு, கன்னடம் முதலியவை பேசும் நாயுடுக்களும் நாயக்கன்மார்களும் உண்டு. வேளாளர், வன்னியர், குறவர், ஒட்டர், தெலுங்கு, தமிழ் பாஷை

களைப் பேசும் இரண்டு ஹரிஜனப் பிரிவு களுமுண்டு. இத்தனை ஜாதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவருண்டு. ஊர்க்கவுண்டன் அல்லது ஊர் நாயக்கன் போன்ற பெயரால் அவர் அழைக்கப் படுவார். அவர்களுக்குப் பரம்பரை பாத்தியமுமுண்டு. அவர்களில் ஒரு சிலரும், அவர்களுடைய உறவினரின் சிலரும் திருட்டுத்தனமாய் வெகு தூரத்திலிருந்து கள் வரவழைத்துக் குடிப்பதாகப் புகார் ஏற்பட்டது. ஒரு ஆள் விஷயத்தில் ருசுவும் அகப்பட்டது. அது தெரிந்தவுடன் மற்றவர்கள், "சரி, சரி! தலையே மீறும்போது நமக்கென்ன?" என்று சொல்லிக் கொண்டு, பழைய மோஸ்தரில் இறங்கி விட்டனர். ஆனால் அப்பொழுதே குடியை விட்டவர்களும் சிலருண்டு; ஊர்ப் பெரியதனக்காரர்கள் தான் கூடி, பாண்டு விஷயத்தை ஆலோசிக்க வேண்டியவர்கள். அவர்களுக்குக் கூடிப் பேச முகமில்லை. பாண்டுகளும் தீக்கிரை யாக்கப்பட்டன.

## குடியின் கோர தாண்டவம்

அதற்குப் பிறகு, கடைகளை மூடுவதே சாத்தியமில்லை என்ற நினைப்பு வேரூன்றி விட்டது. குடியும் அமோகமாயிற்று. புட்டுக்காரி சில்லரைக் கடைக்காரி போன்ற காசு நடமாட்டமுள்ள ஸ்திரீகளும் குடியுடன்கூட, சிகரெட் பீடி பழக்கத்தையும் சம்பாதித்துக் கொண்டனர். மாரியம்மன் திருவிழா வென்றால், புளித்த கழிநீரும், மோசமான எல்லா கலப்படங்களும் அடங்கிய அந்த ஆபாசத்தை கைக்குழந்தை முதல் அநேகமாய் எல்லோரும் குடிப்பார்கள். "வயிற்றிலிருக்கும் குழந்தையும் ஒரு சங்கு கேட்கிறது" என்று விளையாட்டாகச் சொல்வது வழக்கம். குடி அவ்வளவுக்கு வலுத்து விட்டது. சண்டைகள், களவுகள், கள் வார்த்து எதிரிகளை அடிக்கச் செய்யும் கோரம், போலீசார் ஓயாமல் 'நியூசன்ஸ்' சார்ஜ் செய்து, தங்களுக்கும் பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கும் வேலை கிடைக்குமாறு செய்வது, இவை வலுத்து வந்தன. அப்பொழுதெல்லாம் தான்யங்களுக்கு நல்ல விலையிருந்தது. எனவே, ஒன்றரை அல்லது 2 வட்டிக்கு சாதாரணக்கடனும், 6¼ வட்டி (75 அல்லது 80% வரை) கந்துக் கடனும் கேட்பதற்கு முன் கிடைத்துக் கொண்டிருந்தன. கள் குடியினால் தேகாரோக்கியம் கெட்டு, சாகுபடிசெய்யும் சக்தியை இழந்து, பிறகு நிலமும் மோசம் செய்து, விலை வாசியும் விழுந்து விடவே, கிராம வாசிகளெல்லாம் தத்தளித்தனர். ஆனால், குடியென்னமோ குறைந்தபாடில்லை; எப்படியாவது பொய் சொல்லியோ, புளை சுருட்டோ, பித்தலாட்டம் செய்தோ அல்லது கஷ்டப்பட்டோ சம்பாதிக்கும் பணத்தைத் தினசரி கப்பங் கட்டும்படியான நிலைமையில் ஜனங்கள் இருந்து வந்தனர். ஆணின் சம்பாத்தியமெல்லாம் கள்ளுக்கடைக்கு; பெண்ணின் கூலி வருமானம் குடும்பத்துக்கு மூலாதாரம். அந்த நிலைமையில், போதிய போஷாக்கின்றி மக்களில் பெரும்பான்மையோர், நடைபிணங்களாகக் காலங்கழித்தனர்.

## குருடனுக்குக் கண்

அதிலிருந்து விமோசனமில்லை என்று ஏங்கிக் கிடந்தவர்களுக்கு, "பயப்பட வேண்டாம்," என்று அபயம் தந்தது காங்கிரஸ். சென்ற வருஷம் அக்டோபர் முதல் தேதி அவர்களுக்கு வழி பிறந்தது. குருடன் இழந்த பார்வையைப் பெற்றது போல் மக்கள் பரமானந்த மெய்தினர்.

(மது விலக்கினால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றிய விவரம் அடுத்த இதழில் வெளியாகும்,)

# கிராமப் புனருத்தாரணம்

[ரா. குஞ்சிதபாதம்]

(தொடர்ச்சி)

முதலில் விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். இதில் இரண்டு அம்சங்கள் உண்டு. பாங்கிகள் அபிவிருத்தி ஒன்று, விவசாய அபிவிருத்தி இரண்டு. முதல் அம்சத்தில் தொழில்கள், வியாபாரம் இவைகளில் இருப்பது போல முதலுக்கு விவசாயத்தில் அவ்வளவு மதிப்பு இல்லை. அதற்குக் காரணம் தொழில்களில் உற்பத்தியைப் பாதிப்பது முதலும் தொழிலும் தான்; விவசாயத்திலோ ஒரு மூன்றுவது விஷய மிருக்கிறது—நல்ல பருவம்; காலத்தில் பெய்யும் நல்ல மழை விவசாயத்தில் ரொம்ப முக்கியம். ஆகையால் விவசாயத்தில் ஒரு நிச்சயம் கிடையாது. மேலும் விவசாயத்தைப்போல உற்பத்தி பண்ணினவன் கொடுத்து விலையை வாங்கிக் கொள்ளுவது என்பது வேறு எந்தத் தொழிலும் கிடையாது. ஆகையால் லாபத்தில் கூட நிர்ணயம் கிடையாது. லாபத்திலேயே கண்ணுயிருக்கும் சொந்த பாங்கிகள் விவசாயத்தில் பணம் போடும் என்று எதிர்பார்க்க முடியாது. அரசாங்கமும் விவசாயிக்கு ஒருபாலாக இருக்கவும் முடியாது. குடியானவன் சௌவுகரியமாக கடன் வாங்குவதற்கான வசதிகளை வேண்டுமானுல் சர்க்கார் செய்து கொடுக்கலாம். உலகத்தில் எல்லா இடங்களிலும் கூட்டுறவு முறையே விவசாயிகளுக்கு கடன் வசதிகள் அளிப்பதற்கு இன்றியமையாத சாதனமாய் இருக்கிறது.

ஆனுல் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உதவியளிப்பதாகச் சொல்லவே முடியாது. நடைமுதல் விவசாயத் தொழிலுக்குத் தேவையான வகையில் வசதி அளிக்கவில்லை. மிராசுதார்கள் பழையகடன்களைத் தீர்க்கவோ கலியாணம் கார்த்திகைகள் செய்யவோ தான் உபயோகப்படுகின்றன. அநேகமாக பிரசிடெண்டும் காரியதரிசியும் சேர்ந்து வைத்தது சட்டமாகி உண்மையில் கூட்டுறவு என்று சொல்லும்படியாக அவைகளில் ஒன்றுமே நடைபெறுவதில்லை. குடியானவனுக்கு உண்மையில் உதவி செய்யக் கூடிய கூட்டுறவு சங்கம் பின்வருமாறு இருக்க வேண்டும்.

(1) கடன் தொகை எந்த விதமாக உபயோக மாகிறது என்பதைத்தான் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். கடன் கொடுப்பதிலேயே தொகை எந்த விதமாகக் கொடுத்தால் விருத்தி யம்சத்தில் செலவாகும் என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகையால் கடன் வாங்குகிறவன் தொகையை, பண்ணை சாமான்கள், விதை, பாசனம் வடிகால வசதி அபிவிருத்தி—இவற்றில் செலவிடுகிறவர்களுக்குத்தான் கடன் கொடுக்க வேண்டும்.

(2) கடன் கொடுத்த பிறகு சங்கம் அவன் அதை சரியாக உபயோகிக்கிருனு என்று கவனிக்க வேண்டும். அதற்காக அங்கத்தினர்கள் தம்மிடையே ஒத்துழைப்புக் கொள்ளவேண்டும். சங்கத்தை விட்டு வெளியே கடன் வாங்குகிற அங்கத்தினர்களை வெளியேற்றி விடவேண்டும்.

(3) அங்கத்தினரிடமிருந்து டிபாஸிட்டுகள் வருவதற்கு வசதிகள் செய்யவேண்டும். சிறு தொகைகளையும் கட்டித் திரும்பி வாங்க சௌகரியம் இருக்க வேண்டும். குடியானவர்கள் மிச்சம் பிடிக்கும் சிறு தொகைகளையும் சங்கம் மூலமாக உருப்படுத்தி மூலதனமாக்க வேண்டும்.

(4) கூட்டுறவு முறையில் இருக்கும் முக்கியமான பலன்களில் ஒன்று, அதன் மூலம் குடியானவன் விஷய ஞானம் பெறுவது. கர்ணமோ முனிசிப்போ பிரஸிடெண்டாகவும் காரியதரிசியாகவும் இருக்கிற சங்கங்களில் இந்தப் பலனே தென்படுகிறதில்லை. கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தியில் அவனும் பங்கு கொண்டவன் என்பதைக் குடியானவன் அறியும்படி செய்ய வேண்டும். அதன் நடவடிக்

கைகளில் அவனுக்கும் பொறுப்பும் உரிமையும் உண்டு என்பதை அவன் உணர வேண்டும்.

(5) இதர விற்பனை அம்சங்களுடன் கலந்திருந்தால்தான் கடன் வசதிகளுக்கு உபயோகம். ஆகையால் கடன் வசதி மட்டும் போதாது. டிபாஸிட்டுகளை உபயோகமான முறைகளில் பயன்படுத்தும் வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். கூட்டுறவு, பால், நெய் சங்கங்களும், கோழி அபிவிருத்தி, முட்டை வியாபாரச் சங்கங்களும் ஆரம்பமாக வேண்டும்.

மார்க்கெட்டில் சரக்குகளை விற்பனைக்கு விடுவது மற்றொரு முக்கியமான விஷயம். 1925-ம் வருஷம் வரையில் கூட தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இலங்கைக்குத் தேவையான பெருவாரியான அளவு அரிசி ஏற்றுமதி ஆகிக்கொண்டிருந்தது. உள் நாட்டில் விலை போகாத மட்ட ரகமான அரிசியை யெல்லாம் சில வியாபாரிகளே அங்கே ஏற்றுமதி செய்வதை நான் பார்த்திருக்கிறேன். முடிவில் என்ன ஆயிற்று? பர்மா, ஸையாம் அரிசி, தஞ்சாவூர் அரிசியைக் காட்டிலும் தரமாக இருக்கிறது என்று கண்டு இலங்கை தஞ்சாவூரிலிருந்து இறக்குமதியை நிறுத்தி விட்டது. இப்பொழுது உள் நாட்டு வியாபாரத்திலும், ஏற்றுமதியிலும் சரக்கின் நயத்தைப் பொருத்திருக்கிறது அபிவிருத்தி. ஆகையால் ரகங்களை நிர்ணயித்து தரவாரி விலை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் பல ஒன்றுகூடி மத்திய ஸ்தாபனமாகக் கடை ஏற்படுத்தி சரக்குகளை ரகப்படுத்தி விலை போட்டு மார்க்கெட்டுக்கு அனுப்பலாம். இந்தக் கடைகளில் அங்கத்தினர்கள் விலை வாசிகளை உத்தேசித்து தங்கள் தானியத்தைக்கூட சேகரம் செய்து வைக்கலாம். அதற்காகக் குடியானவன் பெறும் ரசீதை ஆதாரமாக வைத்துக் கொண்டு அந்த தானியத்தின்மேல் கடன் கூடக் கொடுக்கலாம். கொஞ்ச காலம் கழிந்தால் மார்க்கெட்டுக்குத் தேவையான சரியான ரகமுள்ள தானியத்தை உற்பத்தி செய்ய குடியானவர்கள் கற்றுக் கொள்ளுவார்கள்.

பின் வரும் வழிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் குடியானவனுக்கு உதவி செய்யலாம்.

(1) விவசாயப் பொருள்கள் விற்பனையில் குடியானவனுக்கும் வியாபாரிக்கும் நடுவில் தரகன் ஒருவன் இருக்கிறான். மாட்டுச் சந்தைகளில்கூட தரகன்தான் நடுவிலிருந்து சகலத்தையும் செய்கிறான். கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பொதுவில் கொடுக்கல் வாங்கல் செய்தால் இந்தத் தரகனே தேவையில்லை.

(2) தானியத்தை வியாபாரிகளிடம் அளந்து போடுவதற்காக ஒரு கூட்டம் இருக்கிறது. அது குடியானவனைப் பிடுங்கித் தின்னும் கூட்டம். அளக்கிறதில் அவர்கள் பண்ணுகிற தில்லுமல்லில் 5 சத விகிதம் கூட அளவில் அதிகம் அடித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். ஒவ்வொரு கிராமக் கூட்டுறவுச் சங்கத்திலும் ஒரு நிறுவை இயந்திரம் இருந்தால் நிறுவையே பிறகு சகஜமாகிவிடும்.

(தொடரும்)

---

## சமுதாய வாழ்க்கை

இங்கிலாந்தில் வில்ட் ஷயருக்கும் கிளஸ்டர் ஷயருக்குமுள்ள எல்லைப் பிரதேசத்தில் ஒரு கிராமம் இருக்கிறது.

அதில் இருநூறு பேர் குடிகள் இருக்கிறார்கள்; அநேகமாக எல்லோரும் ஜெர்மன் பாஷை பேசுகிறவர்கள். அவர்களைப் பார்த்தால் இந்தக் காலத்துக்குப் பிரகிருதிகளைப் போலவே தோன்றாது; அவ்வளவு புராதனப் போக்குக் கொண்டவர்கள்.

ஆண் மக்களெல்லாம் தாடி மீசை வளர்ந்தவர்களாய் தலையில் தொப்பி கூட இல்லாமல் இருப்பார்கள். பெண்களெல்லாம் பழைய காலத்துக் கிராமாந்திர ஆடைதான் அணிந்து கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்குக் காட்ஸ்வால்டு ப்ரூடெரோப் என்று பெயராம்; அவர்களுடைய சொத்தெல்லாம் பொதுவுடைமை. அவர்களுக்குப் பண்ணைத் தொழில் தான் முக்கியமான ஜீவ

னம். அவர்கள் "வைதிக" கிரிஸ்துவர்கள்; ராணுவத்தில் வேலை செய்யமாட்டார்கள் ; ஒருவருக்காவது சொந்த சொத்துக் கிடையாது.

"திவ்விய வாக்கின் ஊழியர்கள்" என்று அவர்களுக்கு நான்கு தலைவர்கள். கலியாணங்கள் செய்து வைப்பது கூட அவர்களுடைய வேலைகளில் ஒன்று. பொதுவில் அந்த சமுதாயத்தின் பொக்கிஷத்தைக் கையாளுபவன் ஒருவன்; 'வேலை விலேவாரி' செய்பவன் ஒருவன்—இப்படியாக இன்னும் சில உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். முக்கியமான விஷயங்களை யெல்லாம் கிராமப் பொதுவால் தான் சர்ச்சை செய்து முடிவுக்கு வருகிறார்கள் அவர்கள் உலகத்திலிருந்து ஒதுங்கி வசிக்கிறார்களே தவிர, உலக நடவடிக்கைகளை கவனிக்காமலில்லை. பொதுவாகத்தான் அவர்கள் சாப்பிடுவது ; அப்பொழுது யாராவது ஒருவர் பொது விஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்வார். சரித்திரம், பொருளாதாரம், பல பாஷைகள் இவற்றை அவர்கள் கற்றுக் கொள்ளுகிறார்கள். சுமார் 11,000 புத்தகங்களடங்கிய ஒரு புத்தகாலயம் அவர்களிடையே இருக்கிறது. பழையசுவடிகள் கூடத் திரட்டி வைத்திருக்கிறார்கள்.

ஒரு பத்திரிகை கூட அச்சிட்டு வெளியிடுகிறார்கள். அது வருஷத்திற்கு நான்கு முறை வெளி வருவது. அதற்குப் பெயர் "கலப்பை: வருப்போகும் சமுதாயத்திற்காக". அவர்களுடைய தலைவர்களில் ஒருவரான ஆர்னல்ட் என்பவர் அதற்கு ஆசிரியர்.

இந்தச் சமுதாயத்தை முதல் முதலாக டாக்டர் எபரார்டு ஆர்னல்ட் என்பவர் ஜெர்மனியில் 1920-ம் வருஷம் துவக்கினர். 1936-ம் வருஷம் அதன் ஒரு பிரிவு இங்கிலாந்திற்கு வந்தது.

அதில் இப்பொழுது 121 வயது வந்த பேர் வழிகளும் 92 குழந்தைகளும் இருக்கிறார்கள். மொத்தத்தில் 40 குடும்பங்கள் இருக்கின்றன. பாதிபேர் ஜெர்மானியர்; சுமார் 40 பேர் ஆங்கிலேயர்; பாக்கி பேர்—பல பட்டரை—ஸ்விஸ் பிரஞ்சு, இதாலியன் முதலியவர்கள்; அது ஒரு இளம் கூட்டம்; கலியாணமானவர்கள் எல்லோரும் 30 வயதிற்குட்பட்டவர்கள் தான். கர்ப்பத்தடை கூடாதாகையால் குழந்தைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அத்துடன் அனாதைக் குழந்தைகளையும் ஏழைக் குழந்தைகளையும் அவர்கள் எடுத்து ஆதரிக்கிறார்கள்.

"கல்வி அறிவு தான் எங்கள் உத்தமமான வேலை" என்கிறார்கள். 15 வயது வரையிலும் போகும் ஒரு 10 வருஷக் கல்வி திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ஜெர்மன் பாஷை மட்டும் தான் இருந்தது; இப்பொழுது பள்ளிக்கூடங்களில் இரண்டு பாஷைகள் வழங்குகின்றன. பெற்றோர்கள் இஷ்டப்பட்டால் குழந்தைகள் சர்வ கலாசாலைக்குப் போகலாம்.

நண்பர்கள் உதவியைக்கொண்டு அந்தப் பண்ணையை வாங்கினார்கள். ஆதியில் அங்கே இருந்த வீட்டை வாசஸ்தலமாகவும் சமயல் அறையாகவும் செய்துவிட்டார்கள். பழைய லாயத்தை மாற்றி அறைகள் ஏற்படுத்திவிட்டார்கள்—படுக்கைக்கும் உட்காருவதற்குமாக—அவர்களே ஒரு பள்ளிக்கூடம், ஒரு ஆஸ்பத்திரி, பொது சாப்பாட்டு அறை, முதலியவை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். 100 ஏகர்கள் சாகுபடியாகின்றன; 11 ஏகர்கள் தோட்டங்கள்; 50 பசுக்கள் இருக்கின்றன; 120 ஆடுகளும் 1000 கோழிகளும் இருக்கின்றன. கால் நடைகளுக்கும் கோழிகளுக்கும் அடிக்கடி இடம் பெயர்த்து கொட்டில் கட்டி நிலங்களை உரங் கொண்டவைகளாகச் செய்கிறார்கள். தானியத்தை அவர்களே மாவாக்குகிறார்கள்; தாங்களே ரொட்டி செய்து கொள்ளுகிறார்கள். ஒரு சின்ன மின்சார பிளான்ட் இருக்கிறது; பொதுவாக ஒரு 'வெள்ளாவி' இயந்திரமும் இருக்கிறது.

பெண்கள் பொதுச் சமையல் அறையிலும், துணி வெளுக்கும் லாண்டிரியிலும், குழந்தைகளுடன் ஆபீஸ்களிலும், வீட்டு வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். ஆண்கள் பண்ணையிலும், தோட்டங்களிலும், கைத்தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள். குழந்தைகளுக்கு இருக்கும் போஷாக்கு மிகவும் ஏற்பாடாக இருக்கிறது. அவர்களுக்காக விளையாடும் இடங்களும் நீந்த ஆழமில்லாத குட்டைகளும் இருக்கின்றன.

நல்ல உழைப்பு; எளிமை வாழ்வு - இது தான் இந்த சமுதாயத்தில் இருக்கிறவர்கள் வாழ்க்கை. ஆனால் இது அவர்களாக இஷ்டப்பட்டு ஏற்றுக்கொண்டது.

அவர்கள் இன்னும் முன்னேற்றமடைவதற்குப் பொருள் தேவை. சமீபத்தில் சிலர் சேர்ந்து அதற்கு நூற்றுக்கு நாலு வட்டியில், 20 வருஷங்களில் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

# புத்திசாலிப் பிள்ளையாண்டான்

(ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார்)

இடம்: ஒரு பெரிய சாலை.
(ஒரு பெரிய மனிதர் நின்றுகொண்டிருக்கிறார்.

பிள்ளையாண்டான் ஒரு சின்னக் குதிரையைப் பிடித்துக்கொண்டு வருகிறான்).

பிள்ளையாண்டான்.—இந்தாங்க உங்க குதிரெ.

பெரியவர்.—ரொம்ப சந்தோஷம், பையா! ஓடிப்போன என் குதிரையை மிகவும் சாதுர்யமாகப் பிடித்துக்கொண்டு வந்தாய். நீ கஷ்டப்பட்டதற்காக உனக்கு நான் என்ன கொடுக்கவேண்டும்?

பி.—எனக்கு ஒன்றும் வேணும்.

பெ.—வேண்டாமா? ஆனால் நீ அதிஷ்டசாலி தான்!—எத்தனை பேர் அம்மாதிரி சொல்லமுடியும்?—வயலில் நீ என்ன செய்துக்கொண்டிருந்தாய் சற்று முன்?

பி.—களெ பிடுங்கிக்குனு இருந்தேன். ஆட்டுங்களைப் மேச்சிக்கினு இருந்தேன்.

பெ.—இந்த வேலை உனக்கு இஷ்டமாயிருக்கிறதா?

பி.—ஆமாங்க. இந்த மாதிரி நல்லா சூரியன் காயும்போது இந்தவேலை எனக்கு ரொம்ப இஷ்டமாயிருக்கு.

பெ.—ஆனால் உனக்கு மற்ற பிள்ளைகளைப்போல் விளையாட இஷ்டமில்லையா?

பி.—இது கஷ்டமான வேலை இல்லிங்க. இதுவும் எனக்கொரு வெளெயாட்டா இருக்கிறது.

பெ.—இந்த வேலையைச் செய்யும்படி உன்னை யார் நியமித்தது?

பி.—எங்க நாயனு.

பெ.—அவர் எங்கே வசிக்கிறார்?

பி.—அதோ அந்த மாந்தோப்புலே.

பெ.—அவர் பெயர் என்ன?

பி.—தம்பியப்ப பிள்ளை.

பெ.—உன் பெயர் என்ன?

பி.—பினுகபாணி.

பெ.—உனக்கு என்ன வயதாகிறது?

பி.—தீபாவளி வந்தா எட்டாகும்.

பெ.—இந்த வயலிலே எத்தனை நாழியாக வேலை பார்த்து வருகிறாய்?

பி.—காலமெ ஆறுமணியிலிருந்து.

பெ.—உனக்குப் பசிக்கவில்லையா இப்பொழுது?

பி.—நான் சாப்புட சீக்கிரம் போகப் போறேன் வூட்டுக்கு?

பெ.—இப்போது உன் கையில் அரை ரூபாய் கிடைத்தால் அதை என்ன செய்வாய் நீ?

பி.—எனக்குத்தெரியாது. அவ்வளவு பணம் என் கையிலே எப்பவும் இருந்ததில்லே.

பெ.—விளையாட்டுச் சாமான் உன்னிடம் ஒன்றுமில்லையா?

பி.—வெளயாட்டுச்சாமான் இண்ணு? அது என்னுதுங்க?

பெ.—பந்து, கோலி, பம்பரம், காத்தாடி, மர பொம்மை முதலியன.

பி.—இல்லிங்க. எங்க அண்ணுத்தெ, மழைகாலத்திலே நாங்கல்லாம் வெளயாட தோலாலே பெரிய பந்து பண்ணிக் கொடுக்கறாரு. குருவிங்களயெல்லாம் புடிக்கிறேம் நாங்க—பாணு பழவ கோலிருக்குது; கால்லே கட்டிகினு உயரமா நடக்க பெரிய ரெண்டு கொம்புங்க வைச்சிருக்கேன். இன்னம் ஒரு இரும்பு வளையம் இருக்குது, உருட்டிகினு போக. ஆனு அது உடஞ்சி போச்சி கொஞ்ச நாளுக்கு முன்னே.

பெ.—வேறொன்றும் உனக்கு வேண்டாமா விளையாட?

பி.—இதுங்களே வைச்சிக்கினு வெளெயாடவே எனக்குப் போதில்லையே? எனக்குவேலே சரியாயிருக்குது. நான் வூட்டுச் சின்னக் குதிரையெ இட்டிக்கினு சந்தைக்குப் போரேன். ஆடு மாடுங்களெயெல்லாம் பார்த்துக்க வேண்டியதாயிருக்குது. பட்டணம் போயி என்னமா நான் சாமானும் வாங்கிக்கினு வர்ரேன்? இதெல்லாம் எனக்கு பெரிய வெளெயாட்டாத்தான் இருக்குது.

பெ.—ஆனாலும் உன் கையில் பணமிருந்தால் நீ மாம்பழம் வாங்கித்தின்ன

லாம். மசால வடை வாங்கிச் சாப்பிடலாம், பட்டணம் போகும்போது.

பி.—ஹூம்! எனக்கு வூட்டுலே பெரிய மாம்பழம் கொடுக்காங்க. மசால் வடை எனக்கு இஷ்டமில்லே. எங்கவூட்டுலே எள்ளுண்டை சுட்டுக் தராங்க எங் கம்மா. அதுவே நண்ணுயிருக்கு.

பெ.—ஒரு சின்னக் கத்தி யிருந்தால் ஏதாவது சிவ உனக்கு உபயோகப் படாது?

பி.—எங்கிட்ட ஒண்ணு யிருக்குது. இதோ பாருங்க—எங்கண்ணன்—தாமு அண்ணென் எனக்குக் கொடுத்தான்.

பெ.—உன் செருப்பெல்லாம் கிழிந்து போயிருக்குதே! புதியதாக ஒரு ஜதை உனக்கு வேண்டாமா?

பி.—பட்டணம் போகும்போது போட்டுக்கினு போக நல்ல ஜதை ஒன்று எங்க வூட்டுலே யிருக்குது.

பெ.—இதைப் போட்டுக் கொண்டு சேற்றில் நடந்தால் காலெல்லாம் சேராய்ப் போகாதா உனக்கு.

பி.—அது பரவாயில்லிங்க. வூட்டுக்குப் போனவுடனே கழுவி விட்டாப்போகுது.

பெ.—உன் குல்லாய் பழசாகி விட்டதே.

பி.—எங்க வூட்டிலே ஒரு புதுக் குல்லா வைச்சிருக்குறேன்-இந்தக்குல்லாயே இல்லாதிருந்தா நல்லது. அத்தெப் போட்டுகிற துக்கு எனக்கு இஷ்டமே யில்லெ. எந் நேரம் போட்டுக்கினு இருந்தா தலெ நோவுது.

பெ.—இல்லாமலிருந்தால் மழை பெய்தால் என்ன செய்வாய்?

பி.—ரொம்ப மழை பெஞ்சா அது நிக்கர வரைக்கும் ஒரு செடியின் கீழே நிக்கிரேன்.

பெ.—வீட்டுக்குப் போகிற வேளை வருவதற்குள் உனக்குப் பசி யெடுத்தால் என்ன செய்வாய்?

பி.—வயலிலே இருக்கிற முள்ளாங்கியெ பச்சையாத் தின்னுடுவேன்.

பெ.—முள்ளாங்கி அகப்படாவிட்டால்?

பி.—பட்டினியா யிருக்கிறது. வேலெ செய்துக்கினு இருந்தால் பசியெல்லாம் தெரியாதுங்க.

பெ.—இந்த வெயில் காலத்தில் உனக்கு தாக மெடுக்கிறதில்லையா?

பி.—எடுக்குது. சாப்பிட அந்த குளத்திலே நல்ல தண்ணி இருக்குதே.

பெ.—தம்பி, நீ நல்ல புத்திசாலி.

பி.—அப்படியின்னு?

பெ.—நீ புத்திசாலி என்று சொன்னேன்; அந்த பதத்திற்கு உனக்கு இப்பொழுது அர்த்தம் தெரியாது.

பி.—அது ஒண்ணும் தப்பில்லிங்களே?

பெ.—(சிரித்துக் கொண்டே) தப்பு ஒன்றுமேயில்லே!—தம்பி, ஏதாவது வேண்டுமென்று உன் மனதில் இச்சையைக் காணும். ஆகவே உனக்குப் பணத்தைக் கொடுத்து இச்சையை உண்டு பண்ண எனக்கிஷ்டமில்லே—உம்—நீ பள்ளிக்கூடம் போகிறதில்லையா?

பி.—இல்லிங்க! இந்த தை மாசம் அறப்பு அறத்தவுடனே என்னெ பள்ளிக்கூடத்துக்கு அனுப்பறதாவ எங்க நாயினு சொல்ராங்க.


பெ.—அப்பொழுது உனக்கு புஸ்தகங்கள் வேண்டாமா?

பி.—ஆமாம். பள்ளிக்கூடத்துக்குப் போர பசங்கள்ளாம் அரிச்சுவடி வாய்ப்பாடு கணக்கு அல்லாம் வைச்சிக்கினு இருக்காங்க.

பெ.—ஆனல் சரி.—நீ இருக்கிறதே போதுமென்று இருக்கும் நல்ல பையன். அதற்காக அந்த இரண்டு புஸ்தகங்களையும் உனக்கு நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்னதாக உன் நாயனுவிடம் சொல்—போ தம்பி. உன் ஆடுகளை மேய்க்கப்போ.

பி.—நான் வரேனுங்க (புன் சிரிப்புடன் கும்பிடுகிறுன்)

பெ.—புத்திசாலி! போய் வாப்பா (போகிறுன்)




# நத்தைக்குடம்

(ந. பிச்சமூர்த்தி)

இருந்த இடத்திலிருந்தே ஆடுகளையும் மாடுகளையும் மான்களையும் மலைப் பாம்பு பிடித்துத் தின்று வருவது வழக்கம். அப்படித் தின்று வந்த போதிலும் அதற்குத் தாகமென்பதே அந்த நாளிலே கிடையாது. தாகமென்பதே இல்லாமல் மலைப் பாம்பு இருப்பதாகக் கேள்விப்பட்ட காட்டு ராஜா சிங்கத்திற்குப் பயம் உண்டாகி விட்டது. ஒருக்கால் காட்டிலிருக்கும் பிராணிகளெல்லாம் சேர்ந்துகொண்டு, எல்லோரையும் போலில்லாமல் தாகமென்பதே தெரியாத மலைப் பாம்பை ராஜாவாகச் செய்து விட்டால் தனக்கு இடம் இல்லாமல் போய் விடுமே என்ற கவலை வந்து விட்டது. ஒரு யுக்தி செய்தது. மலைப் பாம்பினிடம் சென்று, "உனக்குத் தாகம் எடுப்பதில்லையா என்ன ?" என்று கேட்டது.

"இல்லை" என்றது மலைப்பாம்பு.

"இவ்வளவு பெரிய நோய் உனக்கிருப்பது தெரியவில்லையே !" என்று சிங்கம் கண்ணீர் விடத் தொடங்கிற்று.

மலைப்பாம்பு நடு நடுங்கிப் போய் "என்ன ?" என்று கேட்டது.

"தண்ணீர் குடிக்காவிட்டால் வாழ்நாள் குறைந்து விடும். தெரியாதா ?"

"தெரியாதே! அதற்காக என்ன செய்ய வேண்டுமென்று சொல்லு. அந்தப்படி செய்கிறேன்" என்றது மலைப்பாம்பு.

"தினம் முப்பத்தி ஏழு சொட்டு ஜலமாவது குடித்து வரவேண்டும். இல்லாவிட்டால் நீ செத்துப் போய் விடுவாய்" என்றது சிங்கம்.

மலைப் பாம்புக்கு பயம் நீங்கி விட்டது. அன்றைய தினம் சாயங்காலமாக ஒரு மானைத் தின்று விட்டு மலைப்பாம்பு மரத்திலிருந்து தலைகீழாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. ரொம்ப நேரமாயிற்று. முப்பத்தி ஏழு சொட்டு ஜலம் சாப்பிட்டாக வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. சுற்று முற்றும் பார்த்தது. ஒரு சிறு நத்தையைத் தவிர வேறு ஒரு விதமான பிராணியும் கண்ணில் படவில்லை.

"ஏ, நத்தை !" என்றது.

நத்தை "ஏன்?" என்றது.

"எனக்குத் தாகமாயிருக்கிறது. முப்பத்தி ஏழு சொட்டுக்குக் குறையாமல் ஜலம் வேண்டுமே" என்றது மலைப்பாம்பு.

அந்த நாளிலே நத்தைகளுக்கெல்லாம் முதுகிலே கூடு கிடையாது.

"என்னிடம் குடமா தோண்டியா நான் எப்படி ஜலம் கொண்டு வருவேன் ?" என்றது நத்தை.

மலைப் பாம்பு பார்த்தது. ஒன்றும் புரியவில்லை. தண்ணீர் குடிக்கா விட்டால் செத்துப் போய் விடுவோமே என்ற பயம். யோசனை தோணாமல் தலையை மரத்தில் மோதிற்று. தலைக்குள்ளிருந்த நாகமணி கழன்று தரையில் விழுந்தது. மலைப்பாம்பும் நத்தையும் நாகமணியைப் பரிசோதித்தன. நாகமணியில் ஒரு பள்ளம் இருந்தது. கட்டாயமாக அதில் முப்பத்தி ஏழு சொட்டு ஜலம் கொள்ளும். "இதை எடுத்துக் கொண்டுபோய் ஜலம் கொண்டு வா" என்று கட்டளையிட்டது பாம்பு.

நத்தை நாகமணியை எடுத்துக்கொண்டு போய் ஜலம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தது. அதற்குள் இருட்டிப்போய் விட்டது. "நாளைக்கு வரவேண்டும். தினசரி இந்தமாதிரி ஜலம் கொண்டு வரவேண்

டும், தெரியுமா ?'' என்றது பாம்பு. சரி யென்று சொல்லிவிட்டு நத்தை போய் விட்டது.

மறுநாள் முதல் நத்தை நாகமணியில் ஜலம் கொண்டுவரும். மலைப்பாம்பு குடிக்கும். இப்படியே ஒரு வாரம் கழிந்தது. ஒருநாள் சாயங்காலம் நேரமாய் விட்டது. நத்தை வரவில்லை. மலைப்பாம்புக்குப் பயமும் கோபமும் மாறி மாறி எழுந்தன. புஸ் புஸ் என்று சீறி மூச்சுவிட்டது. எங்கேயோ இருந்த நத்தைக்குத் திகில் எடுத்து விட்டது. ஓடோடியும் வந்தது.

“ஏன் ஜலம் கொண்டு வரவில்லை?'' என்று தீப்பொறி பறக்கக் கேட்டது பாம்பு.

“என்மேல் பிசகில்லை. நாகமணியை இலை வீட்டில் வைத்திருந்தேன். பச்சைக் கிளி பழம் என்று நினைத்து எடுத்துக் கொண்டு போய் விட்டது. நான் என்ன செய்வேன்? என்னிடம் பாத்திரமா பண்டமா ?'' என்றது.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஜலம் கொண்டு வந்தால் ஆச்சு. இல்லாவிட்டால் உங்கள் வம்சத்தையே நாசம் செய்து விடுவேன் !'' என்று பாம்பு சீறிற்று.

நத்தைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. “இதோ வந்து விட்டேன்'' என்று கிளம்பி வீட்டுக்குப் போயிற்று. தன் இனத்தவர் எல்லோரையும் கூப்பிட்டனுப்பி தங்களுக்கு ஏற்படவிருக்கும் விபத்தைப் பற்றி விளக்கிக் கூறிற்று. நத்தைகளுக் கெல்லாம் குலை நடுக்கம் எடுத்தது. எல்லாமாகச் சேர்ந்து யோசித்தன. ஜலம் எடுத்துக் கொண்டு போகப் பாத்திரம் அகப்படவில்லை. “உயிர்ப்பிச்சை கொடு !'' என்று ஒரேமனதாய் எல்லா நத்தைகளும் கடவுளை நினைத்து மனமுருகிப் பிரார்த்தித்தன. “என்ன வேண்டும்?'' என்று கேட்டது அசரீரி.

“பாம்புக்குத் தண்ணீர் மொண்டு போகக் குடம் !'' என்று கூவின.

“பயப்பட வேண்டாம். கிடைக்கும் !'' என்றது அசரீரி.

இப்படி யிருக்கும் பொழுதே ஒரு நத்தைக் குஞ்சு காட்டு நாரத்தை மரத்திலிருந்து இறங்கி இந்தக் கூட்டத்தை நோக்கி வந்தது. அந்த நத்தைக் குஞ்சைப் பார்த்ததும் பெரிய நத்தைகளுக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், நத்தைக் குஞ்சின் முதுகில் ஒரு சிறு கூடு இருந்தது. “பார்த்தாயா அசரீரி சொன்னது பலித்துப் போயிற்று'' என்று கும்மாளம் அடித்தன.

பிறகு குஞ்சைக் குளத்தோரம் அழைத்துக் கொண்டு போய்க் கூட்டில் நீர் மொள்ளச் சொல்லி எடுத்துக் கொண்டு மலைப் பாம்பண்டை நத்தை அழைத்து வந்தது. மலைப்பாம்பும் ஜலத்தைக் குடித்தது. கொஞ்சமாக ஜலம் குடித்ததும் என்றுமில்லாதவாறு ரொம்பத் தாகம் உண்டாய் விட்டது. “இது போதாது. பத்துச் சொட்டுகூட ஜலம் இல்லையே. இதைக் குடித்ததும் தாகம் அதிகமாகி விட்டது. ரொம்பக் கொண்டா. இல்லாவிட்டால் உங்கள் இனத்தையே அழித்து விடுவேன், உஷார்!'' என்று பொங்கி, மரக் கிளை ஒன்றை வாலால் அடித்து முறித்துப் போட்டது.

பெரிய நத்தை திரும்பியும் தன் இனத்தவரிடம் வந்தது. அதற்குள்ளாக நத்தைக் குஞ்சுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கூடு உண்டாகி இருந்தது. பிழைத்தோம் என்று சுவாமியைப் பிரார்த்தித்துக் கொண்டு, நத்தைக் குஞ்சுகளை யெல்லாம் மலைப்பாம்புக்கு ஜலம் கொண்டு போகும்படி கட்டளை இட்டது. அவைகள் பாம்புக்கு ஜலம் கொண்டு போயின.

இந்த மாதிரி மலைப்பாம்புக்கு நத்தைக் குஞ்சுகள் ஜலம் கொண்டு போனதைப் பார்த்த பாக்கிப் பாம்புகளும் “எங்களை அவமானம் செய்யலாச்சா?'' என்று சினந்து படம் விரித்தாடின. நத்தைகள் பயந்து விட்டன. உங்களுக்கும் கொண்டு வருகிறோம் என்று உறுதி கூறின. அது முதல்தான் எல்லாப் பாம்புகளுக்கும் நத்தைகள் ஜலம் கொண்டுபோய்க் கொடுத்து வருகின்றன.

சிறு கதை.

# கோபம் வருமா வராதா!

(டி. ஏ. கிருஷ்ண மூர்த்தி)

"என்ன நாட்டாரே! பங்குனி உத்திரம் இன்னும் பத்து நாள் தானே இருக்குது. இந்த வருசம் நாடவம் கீடவம் ஒண்ணும் வேணுமா? என்ன நீங்க பாட்டுக்கு சும்மா இருக்கிங்களே."

"அதான் யோசனை பண்ணிகிட்டிருக்கேன். பக்கிரி, ஊர்லே தான் ரெண்டு கட்சி ஏற்பட்டுப் போச்சு. தெற்குத் தெரு நாட்டான் எதிர்கட்சியோட சேந்துக்கிட்டான். நான் ஒண்டியாளு என்ன பண்றது? நீங்க எல்லாம் ஒத்து உழைச்சா எதாவது நடத்தலாம்......எல்லாத்துக்கும் பக்கிரி, நாளை அந்திக்கு ஊர்லே கூட்டம் போட்டுப் பேசலாம். என்ன சொல்றே?"

"சரிதான், நாட்டாரே, நல்ல யோசனை; அப்ப வெட்டியானைக் கூப்பிட்டு தமுக்குப் போடச் சொல்லட்டா?"

"சரி சொல்லு."

"டே, தொப்புளான்! துரோபதை அம்மன் கோவிலுக்குக் காப்பு கட்டி நாடகம் போடறத்தே பத்தி கூட்டம் போட்டுப் பேசணும். அதுக்கு எல்லாரும் தவறாமல் நாளை அந்திக்கு கோவில் வாசல்லெ வந்து கூடணும்னு சொல்லித் தமுக்கு போட்டுட்டு வாடா, எலே, புரிஞ்சுச்சா?"

"அப்படியே செய்றேன் சாமி" என்று சொல்லிவிட்டு தொப்புளான் போகிறான்.

* * *

ஆயிபாளையம் ஒரு சிறு கிராமம். எழுபது எண்பது குடிகள்தான் இருக்கும். ஆனால் பணக்காரக் குடியானவர்கள் ரொம்பக்குறைவு தான். ஊரில் இருப்பவர்களில் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவனும் பணக்காரனுமாவான் கணேச நாட்டான். நாட்டாரின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் கூடி, கிராமத்தார்கள் உத்திரத்தன்று "அரிச்சந்திர விலாசம்" போடத் தீர்மானித்தார்கள்.

ஊரார்களால் "ராசா வேஷக்காரர்" என்றழைக்கப்படும் நடேச படையாச்சி அரிச்சந்திரனாகவும் வேசாலி சிங்காரு படையாச்சி சந்திரமதியாகவும் நடிக்க ஒப்புக்கொண்டு பாக்கு வாங்கிக்கொண்டார்கள். மதனத்தூர் ரத்தினமும், உள்ளூர் கந்தசாமியும் சில்லரை வேஷங்கள். கருப்பூர் ரத்தினம் ஆர்மோனியத்திற்கும், ஆசூர் கண்ணு படையாச்சி பின்பாட்டுக்கும் ஒப்புக்கொண்டார்கள். நல்ல செட் தான். வாழக்குரிச்சியிலிருந்து இரண்டு படுதாக்கள் வரவழைக்கப்பட்டன. நாடகத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் ஜரூராக நடந்து வந்தன.

* * *

அம்மன் கோவில் எதிரில், முன்பக்கம் உயர்ந்தும் பின்னே போகப் போகத் தாழ்ந்தும் கீத்துகளால் போடப்பட்ட பெரிய கொட்டகை. நாட்டார் வீட்டில் உள்ள இரண்டு பெரிய விசுப் பலகைகளால் மேடை தயாரிக்கப்பட்டது. கொட்டகையில் சரிபாதியில் ஒரு படுதா. முன் பக்கத்தில் மாரியம்மன் சித்திரம் வரையப்பட்ட ஒரு திரை கட்டப்பட்டது. இரண்டு திரைகளுக்கும் நடுவில் ஒரு ஓரமாக ஆர்மோனியக்காரன், பின்பாட்டுக்காரன் மிருதங்கக்காரன்—நடுவில் இரண்டு மூன்று உரல்கள் தலைகீழாகத் திருப்பிப்போடப்பட்டிருந்தன. அவைகள்தான், ராஜா, மந்திரி முதலியவர்களுக்கு ஆசனங்கள்! கொட்டகையின் முன்பக்கத்துக் கழி ஒன்றில் ஒரு "கியாஸ் லைட்" தொங்கவிடப்பட்டிருந்தது. மேடையின் முன்னே ஒரு உரல் மீது வீற்றிருந்தார் நாட்டாண்மை கணேச படையாச்சி தன் முறுக்கிவிடப்பட்ட மீசையுடன்.

இரவு பத்து நாழிகை ஆயிற்று. உள்ளூர் ஜனங்களும் அக்கம்பக்கத்திலுள்ள உதயநத்தம், கோடாலி, கருப்பூர், சோழமாதேவி—இந்தக் கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் பாய் தலையணை சகிதமாக வந்து கூடிவிட்டனர். சரியாகப் பதினேறு நாழிகைக்கு ஆட்டம் கட்டிவிட்டார்கள். பின்பாட்டில் பேர்போன ஆசூர் கண்ணு கேதாரகௌளம் என்று நினைத்துக்கொண்டு ஒரு பெருத்த குரலில் ஆலாபனம் செய்தார். சாதாரணமாக இந்தக் கூச்சலைக் கேட்டுத்தான் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் "நாடகம் கட்டியாச்சு, வாங்கடா போவோம்" என்று சொல்லிக்கொண்டு வந்து கூடுவார்கள். ஆனால், இந்நாடகத்திற்கு மாத்திரம் எல்லோரும் சீக்கிரமாகவே வந்து சேர்ந்துவிட்டார்கள். காரணம், "ராசா வேஷக்காரர்" அரிச்சந்திரனாக நடிப்பதுதான்!

திரை தூக்கப்பட்டது. சூத்திரதாரர் வந்தார். நடிக்கப்போகும் கதையின் விருத்தாந்

தத்தையும் வரப்போகும் வேஷங்களைப் பற்றியும் அறிவிக்கிறார். பிறகு "பபூன்" வருகிறார். மதனத்தூர் ரத்தினம் சில்லரைப் பாட்டுகளைப் பாடிக்கொண்டு குதித்துக் கொண்டிருப்பார்.

இவர் குதித்துக்கொண்டிருக்கட்டும். கொட்டகையின் பின் பாதியில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். ராஜா வேஷக்காரர் நன்றாய்க் கள்ளைக் குடிக்கிறார். பயப்படாதீர்கள். அவர் மேடை மீது வந்ததும் மயக்கம் வந்து கன்னா பின்னாவென்று உளறமாட்டார். ஏன்? சிறு பையனாய் இருக்கும்போதே ஆரம்பித்துவிட்டார் மதுபானம் செய்ய. அதே வழக்கமாய்விட்டது. க்ஷவரம் செய்துகொண்டு, ஹரிதாரம் மஞ்சள் முதலியவற்றை பூசிக்கொள்கிறார். பிறகு தேங்காய் நாரால் செய்த மீசையை முகத்தில் கட்டிக்கொள்கிறார். மணிகள் கோர்த்த சட்டை காலுக்கு ஒன்று; மேலுக்கு ஒன்று. நாட்டுப்புறங்களில் கலியாண காலத்தில் காசி யாத்திரை போகும்போது ஒரு மாதிரியான "பூட்ஸ்" வாங்குவார்கள். அந்த "பூட்ஸை" காலில் மாட்டிக் கொள்வார். தலைக்கு ஒரு சிகப்பு உருமாலையைக் கட்டிக்கொண்டு அதில் மயில் இறகு ஒன்றைச் சொருகிக் கொள்வார். இப்படி அரிச்சந்திரர் தயாராகிறார். சந்திரமதி வேஷக்காரன் தன் கலியாணத்தின்போது தான் சம்சாரத்திற்கு வாங்கிய பட்டுப் புடவையை உடுத்திக்கொண்டு சவரி மயிரைத் தலைக்குக் கட்டிக்கொண்டு மற்ற அலங்காரங்களுடன் தயாராகிறான். நாடகத்தின் தலைவனும் தலைவியுமே இப்படி இருந்தால் மற்ற வேஷதாரிகளின் அமைப்பைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

உள்ளே அரிச்சந்திரன் சந்திரமதி முதலியவர்கள் வேஷந் தரித்து வெளியே வரத் தயாராகும் வரையில், கட்டியக்காரன், பபூன், மோகனராஜன் முதலிய நடிகர்கள் வந்து ஜமாய்க்கிறார்கள்.

* * *

"போதும் நிறுத்தச் சொல்லுடா, பபூன் காரனை" என்று உத்தரவு பிறக்கும். கட்டியக்காரனைத் தவிர மற்றவர்கள் உள்ளே சென்று விடுவார்கள்.

கட்டியக்காரன், "அயோத்தியாபுரியை ஆளா நின்ற திரிசங்குச் சக்ரவர்த்தியின் திருக்குமாரனான சத்யவாக்கு அரிச்சந்திர பூபதி வருகிறார். மகாராசா பராக்!" என்று உரத்த குரலில் எச்சரிப்பான். ஜனங்கள் வாயில் ஈ நுழைவது கூடத் தெரியாமல் அவ்வளவு கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். பாய் தலையணையுடன் படுத்துத் தூங்கும் சிலர் மற்றவர்களால் எழுப்பப்படுவார்கள்.

"வந்தேனே ஹரிச்சந்திரன், வந்தேனே!' என்று தன்னைப்பற்றி அறிவித்துக்கொண்டே வருவார் பூபதி. இப்போது சுமார் 15நாழிகை.

* * *

"காசி விச்வநாதா, ஏ தெய்வமே! சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு இதோ இதோ என் மனைவியை என் கையால் வெட்டுகிறேன்......" என்று வாளை ஓங்குகிறான்.

* * *

"டேய் கிட்டு எழுந்திருடா. கமலம் கூட வந்தூட்டா பெருக்கிறத்துக்கு, எழுந்திருடா தூங்குமூஞ்சி" என்று ஆசீர்வதித்தாள் என் தாயார். "நன்னா தூங்கித் தூங்கி வீடுதான் தூங்கி வடியறதே......"

"இதோ எழுந்துட்டேன் அம்மா, நிறுத்தேன் உன் ஆசீர்வாதத்தை" என்று எழுந்து பாயைச் சுருட்டினேன்.

ஒரு இனிமையான கனவு; அதுவும் எங்கள் கிராமத்தைப்பற்றி, அதிலேயும் ஒரு நல்ல நாடகம் முடிவடையும் சமயத்தில், ஹரிச்சந்திரன் வாளை ஓங்கின பிறகு என்ன நடக்கிறது என்று பார்க்கப்போகும் சமயத்தில், யாராவது எழுப்பினால் (தாயாராய் இருந்தால் தான் என்ன?) கோபம் வருமா வராதா நீங்களே சொல்லுங்கள்!

# பாமாவின் கடிதம்

(ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாள்.)

ஞாயிற்றுக்கிழமை ஒருவேளை தப்பினுலும் தப்பும்; ஆனல் சோமுவுக்கு அவன் மனைவி பாமாவிட மிருந்து கடிதம் வருவது மட்டும் தப்பாது. சோமு பட்டணத்தில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். பாமா திருநெல்வேலியில் தன் பிறந்த வீட்டில் இருந்தாள். சென்ற கடிதத்தில் பாமா 'ஜாஸ்தியாக எழுதுவதற்கு பென்ஸல் ஓட மாட்டேனென்கிறது; அடுத்த வாரத்தில் நிறைய எழுதுகிறேன். மன்னிக்க வேண்டும்' என்று கடைசியில் எழுதியிருந்தாள்.

சோமு ஆவலுடன் எப்படியோ ஒரு வாரத்தைக் கழித்தான். ஞாயிற்றுக் கிழமையும் வந்தது. ஆனல் எட்டுமணிக்கு வரவேண்டிய தபால்காரன் மணி பத்து ஆகியும் வரவில்லை. சோமு தெருக்கோடியை நோக்கின வண்ணமே இருந்தான். மணி பத்தரை அடித்தது. போஸ்டுமன் தலை தென்பட்டது. சோமுவின் வீட்டை நோக்கியே வந்தான். சோமு ஆவலுடன் கடிதத்தை வாங்கிக்கொண்டான். ஆம். அவன் மனைவியின் கடிதம்தான்; கனமாயிருந்தது. என்ன எழுதியிருக்கிருளோ?

"சோமு எப்பொழுது புறப்படப்போகிருய். மாச்சுக்கு நாழிகையாய்விட்டதே" என்று சொல்லிக்கொண்டே கோபாலன் உள்ளே வந்தான். கோபாலன் சோமுவின் தோழன். சோமுவின் மனது முழுவதும் கடிதத்திலிருந்த போதிலும் அதை எவ்வாறு வெளிக்காட்டுவது? கடிதத்தை தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு அவசரம் அவசரமாய் மாச்சுக்குப் புறப்பட்டான். இருவரும் அவரவர் சைகிள் மேலேறிச் சென்ருர்கள்.

கோபாலன் மாச்சைப்பற்றியே பேசினன். சோமு 'உம்' கொட்டினனே தவிர, வார்த்தைகள் அவன் காதில் விழவேயில்லை. எத்தனை பக்கங்கள் எழுதியிருப்பாள்? என்ன எழுதியிருப்பாள்? எப்படி எழுதியிருப்பாள்? என்று இவ்வாறு யோசித்துக்கொண்டிருந்தான்.

'அய்யோ' என்று ஒரு குரல் சோமுவுக்கும் அவனுடைய எண்ணங்களுக்கும் நடுவில் விழுந்தது. 'கரிக்கட்டையிலே போவன் என் காலில் சைகிளை ஏற்றிவிட்டானே' என்று பாட்டி ஒருத்தி பிரலாபித்தாள். சோமு தன் குற்றத்தை உணர்ந்தான். கோபாலன் 'பாட்டி! எங்கேயோ பார்த்துக்கொண்டு போனல் இப்படித்தான்' என்று சொல்லி சோமுவுக்கு சமிக்ஞை காட்ட, இருவரும் விர் என்று அப்பால் சென்ருர்கள்.

கிரிக்கெட் மாச் சோமுவுக்கு உத்ஸாஹத்தை அளிக்கவில்லை. என்ன நடந்து கொண்டிருந்தது என்றுகூட அவனுக்குத் தெரியாது. ஆனல் வெளிக்கு எல்லாருடனும் தானும் சேர்ந்து கையைத் தட்டினன்.


வீடு சேர்ந்ததும் சோமு தன் அறைக்குள் சென்று அவசரமாய் சட்டையைக் கழற்றிவிட்டு லெட்டரை எடுத்துக் கொண்டு கான்வாஸ் நாற்காலியில் படுத்துக்கொண்டான். அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவன் உடலும் உள்ளமும் பூரித்தன. கடிதத்தை மெள்ள எடுத்தான். மடிப்பைப் பிரித்தான். இதென்ன! முதல் பக்கம் பிளாங்க். இரண்டாவது பக்கமும் அப்படியே மூன்ருவதும் வெறும் தாள்தான். எல்லாம் அப்படி. முகத்தில் கோபக்குறி. ஆனல் எட்டாவது பக்கத்தின் அடியில் சில எழுத்துக்கள் பாமா கைப்படக் காணப்பட்டன.

"அப்பொழுதே பெரிய காகிதம் எழுதவில்லை என்று கோபித்துக்கொண்டீர்களே. இப்பொழுது ஏற்படும் கோபத்தையும் சேர்த்து எழுதக் காகிதம் அனுப்பி இருக்கிறேன். கிருபை பண்ணவேண்டும்.

தங்களுடைய உண்மையான பாமா."

சோமுவுக்கு கோபம் வந்தது. அவன் பலவாறு யோசித்தான். "உண்மையான பாமா" இதைவிட வேறு என்ன எழுத வேண்டும்? சோமுவின் மனம் நிம்மதி அடைந்தது.

(ஒரு கன்னடக் கதையைத் தழுவி எழுதியது)




## லட்சியமும் வழியும்

நமது அவநம்பிக்கைகள் தான் நமது குடியைக் கெடுக்கும் துரோகிகள். காங்கிரஸிலும் அதன் லட்சியத்திலும் நமக்கு நம்பிக்கை வேண்டும். லட்சியத்தில் அபிப்பிராய பேதமிருந்தால் பேசாமல் விலகிப்போய் தன்னிஷ்டப்படி காரியங்கள் செய்யவேண்டும். காங்கிரஸிற்குள் வந்து அதன் மூலாதார தத்துவங்களில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவது கனவான் செய்யும் காரியமல்ல. சத்தியமும் அஹிம்ஸையும் காங்கிரஸின் அடிப்படையான அஸ்திவாரம்.

காங்கிரஸ் பதவி ஏற்பது என்று முன் வந்ததும் எனக்குக்கூட அவநம்பிக்கை இருந்தது. ஆனால் அனுபவம் என் அவநம்பிக்கை தப்பு என்று காட்டிவிட்டது. வாழ்க்கை வெறும் தர்க்கமுமல்ல, வெறும் நியதியுமல்ல. நாம் காலத்தையும் அனுசரித்து நமது போர் முறைகளை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்.

* * *

இந்தியாவை சமஸ்தானங்கள் சேர்ந்த ஓர் சமஷ்டி என்று கூறுவது தவறாகும். இந்தியா அமெரிக்காவைப்போல குடியேறின நாடல்ல. அமெரிக்காவில் தனி நாடுகளும் பிரிவுகளும் வேற்றுமைகளும் உண்டு. ஆனால் சமஸ்தானங்கள் பொறுப்பற்ற அரசர்களால் ஆளப்படுகின்றன என்ற வித்தியாசத்தைத் தவிர சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் வேறு எவ்வித வித்தியாசமும் இல்லை. இந்த சமஸ்தானங்களை நேர் முகமான ஆட்சியின்கீழ் இழுத்து விடுவதற்காகத் தான் பிரிட்டிஷார் அவற்றை சமஷ்டிக்குள் சேரச் சொல்லுகிறார்கள். சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் பேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷார் சமஸ்தான பிரஜைகளைத் தடங்கலில்லாமல் சுரண்டுவதற்கு இவர்கள் ஒரு கருவி. சம்ஸ்தான பிரஜைகள் இந்த அட்டூழியத்தை எதிர்த்துப் புரட்சி செய்யக் கிளம்பிவிட்டார்கள்; ஜனநாயக உரிமையை அவர்கள் கேட்கிறார்கள்.

* * *

நம்முடைய நாகரீகம் ஒரு இயந்திர நாகரீகம், ரூபாய் நாகரீகம். அது வேலையின்மை, கஷ்டம், வறுமை இவைகளை ஒரு புறமும், கொழுத்துக் கொண்டிருக்கும் முதலாளிகளை மற்றொரு புறமும் வளர்க்கிறது. முதலாளி தேசங்கள் தங்கள் கஷ்டங்களைப் போக்க குடியேற்ற நாடுகளைத் தேடுகின்றன. ஒரு குழியைத் தூர்க்க இன்னொரு குழி தோன்றுவதில் பிரயோஜனமில்லை. யுத்தங்களால் எப்பொழுதும் சமாதானம் உண்டாகாது. கார்ல் மார்க்ஸ் தத்துவம் நமக்கு உபயோகமில்லை. மனுவை நாம் பின்பற்றுவோம். கார்ல் மார்க்ஸை விட மனு நமக்கு அறிமுகமானவரல்லவா? நமக்குத் தெரிந்த பிசாசு தெரியாத பிசாசை விட மேலல்லவா?

ரஷிய சமூக முறை எவ்வித அற்புதத்தைச் செய்தபோதிலும் சரி, எவ்வளவு விரும்பத்தக்க பலன்களை அளித்திருந்தபோதிலும் சரி, அந்தப் பலனை அடையக் கடைப் பிடிக்கப்படும் வழி சரியானது அல்ல. வழியும் லட்சியத்தைப் போலவே உன்னதமாயிருக்கவேண்டும்; களங்கமற்றதாய் இருக்கவேண்டும். உண்மை, அஹிம்ஸை, இவைகள் சமாதானத்தையும், சுபிட்சத்தையும், சந்தோஷத்தையும், முக்கியமாக இந்தியாவுக்கும், பொதுவாக ஜன சமுதாயத்துக்கும் கொண்டுவரக் கூடியது. மஹாத்மாகாந்தி தான் அதன் தீர்க்கதரிசி. நாம் அவரைப் பின்பற்றி புது முறைகளுடன் கூடிய புது சாகாப்தத்தை ஆரம்பிப்போம்; நம் சந்தேகங்களைப் போக்கி மனப்பூர்வமாக அவரைப் பின்பற்றுவோம். வெற்றி நம்முடையது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதோ முடிவடையப் போகிறது.

டாக்டர். பட்டாபி சீதாராமய்யா.

# அந்திவானம்

(கு. பா. வெங்கடாசலம்)

அந்தியும் மயங்கி சோர்ந்ததம்மா !—மேல
ஆகாயம் செந்நிறமானதம்மா !
மந்திரம்போல் காட்சிகாட்டுகிறாள்-அன்னை
மாந்தர்கள் கண்டு களிப்பதற்கே.

வானிலேயாகம் வளர்க்கிறாளோ ?—இந்த
வையகம் செழிப்புற்று வாழ்வதற்கு
தேனையுண்ட கருவண்டினைப்போல்—
[நெஞ்சை
திளைக்கவைப்பதும் ஜாலமன்றோ ?

மேகமலையின் விளிம்போரம்—நல்ல
வெள்ளிச் சரிகைகள் மின்னுதம்மா
வேகமாக சுழன்றோடுதம்மா !—மலைகள்
விண்ணில் மிதந்து கரையுதம்மா !


பசுமை நிறமாக மாறுதம்மா—வானும்
பார்த்திருக்க உருக்குலையுதம்மா !
இச்சைதரும் பலவர்ணத்தினால்—அன்னை
எண்ணற்ற சித்திரம் ஏற்றிவைத்தாள்.

தங்கக்குளம் ஒன்று தெரியுதம்மா—அங்கு
தண்ணீரும் பொன்னிறந்தானோஅம்மா?
செங்கதிர் தேவனும் நீராட—குளத்தில்
சென்று இறங்குறான் பாருமம்மா !

பார்க்கவும் கண்கள் கூசுதம்மா !—அந்த
பகலொளிவீசுஞ் சித்திரத்தை.
ஆக்கிய ஓவியம் அத்தனையும்—க்ஷணத்தில்
அந்த காரத்திரை மறைத்த தம்மா !

---

## "குடி வெறி"



[மிராசுதார் வீட்டு ஆட்கள் கள்ளுக் கடையில் குடித்துவிட்டு]

"அடே சொக்கா! இனிமே இந்த கெருமத்துக் குள்ளார ஈ காக்கா நொளையக் கூடாது. அந்திக் குள்ளார, இந்த கெருமம் முச்சூடையும் விலைக்கு வாங்கிடப் போறேன். என்னா சொல்ரே நீ?"

"நீ சொல்ரது சரிதான் அண்ணே! விலைக்குக் கொடுக்கிறதான உத்தேஷமில்லே எனக்கு."

# எதிரொலி

ஒரு மனிதனோ, தேசமோ, ஆத்மாவை இழந்து விட்டால் இந்த உலகத்தையே ஜெயித்துத் தான் என்ன பிரயோஜனம்?

—ஸ்ரீ எம். ஸி. ராஜா.

'ஆத்மா' என்பது ஸ்ரீ. ராஜாவின் அகராதியில் 'இடைக்கால மந்திரிப் பதவி' என்று அர்த்தம் இருக்குமோ என்னவோ!

* * * *

ஸெட்லண்ட் பிரபு கண்ணாடி வீட்டில் உட்கார்ந்து கொண்டு கல்லை விட்டு எறியக் கூடாது.

—ஒரு ஜெர்மன் பத்திரிகை.

ஸெட்லண்ட் பிரபுவின் வீடு கண்ணாடியில் செய்யப்பட்டதல்ல; கருங்கல்லால் தான் செய்யப்பட்டது என்று ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியார் ஓர் அறிக்கை வெளியிடுவாரா?

* * *

எம். ஸி. ராஜா விளாசுகிறார் (ஹிட்ஸ் அவுட்)

—ஒரு சென்னைப் பத்திரிகையின் கிரிக்கட் பாஷைத் தலையங்கம்.

கிரிக்கட்டில் விளாசுகிறவர்கள் அநேகமாகப் பிடிபட்டுப் போய் விடுவார்களாகையால் ஸ்ரீ. ராஜாவும் பிடிபட்டு 'அவுட்' ஆகிவிடப் போகிறாரோ என்று நமக்குச் சந்தேகமா யிருக்கிறது.

ஒரு தேசத்தின் ஆரம்பக் கல்விக்கு யார் அதிகாரத்திலிருந்த போதிலும் சர்க்கார் தான் பொறுப்பாளி.

—ஸர் கே. வி. ரெட்டி.

* * *

நல்ல வேளை! ஸர். கே. வி. ரெட்டி தான் பொறுப்பாளி என்று நினைத்தவர்கள் இனிமேல் சந்தேகந் தீர்ந்து கவலையில்லாமல் இருக்கலாம்!

* * *

'ஆண் நர்ஸ்' போன்ற புதிய விஷயங்களைக் கண்டு பிடித்து நாம் பெருமையடையப் பார்ப்பது எவ்வளவு பரிதாபம்.

—ஒரு சென்னைப் பத்திரிகை.

காங்கிரஸை எதிர்த்தால் பெருமை வந்து விடும் என்று நாம் நினைப்பதும் எவ்வளவு பரிதாபம்!

* * *

"பெண்களுக்குத்தான் 'நர்ஸ்' செய்யத் தெரியும். ஆண்களுக்குத் தெரியாது. பைத்தியம் பிடித்தால்தான் ஆண்கள் நர்ஸ் செய்யலாம்"

—ஆங்கிலோ இந்தியர் சங்கத்தில் ஸ்ரீ. டென்னிஸ்டன் பிரசங்கம்.

அந்த சங்கத்தில் பேசியோரது பிரசங்கங்களைக் கேட்ட பிறகு 'ஆண் நர்ஸ்'களின் அவசியம் இன்னும் நன்றாக ருஜுவாகிறது.

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# தமிழ்ப் படங்கள் எதற்காக?

வே. சு. ரா.

ஆபாஸத் தமிழ்ப் படங்கள் எவ்வளவு முக்கியமென்பதை 'கிரிடிக்' குகளும், 'கிரிடிக்' ஜன்மங்கள் எவ்வளவு முககியமானவை என் பதை படங்களும் நிரூபித்துவிட்டன. உத வாக்கரைத் தமிழ்ப் படத்தின் அவசியத்தைப் பற்றிச் சந்தேகப் படுகிறவர்கள் கூட "கிரி டிக்" குகளின் அவசியத்தைப் பற்றி கொஞ் சங்கூடச் சந்தேகப்படமாட்டார்கள். ஆமை தியும் சமாதானமும் உலகத்தில் நிலவ வேண்டு மென்று விரும்புகிறவர்கள், 'கிரிடிக்' ஜன்மம் அரசியலில் தலையிடாதபடி ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆசைப்படும்போது, 'கிரிடிக்'கின் முக்கியத்துவத்தைத் யாராவது குறைத்துக் கூற முடியுமா?

கண்ருவிப் படங்களின் அவசியத்தை உண ராத சிலர் இன்னும் இருப்பார்களல்லவா, அவர்களுக்கு இன்னொரு விஷயத்தையும் எடுத்துச் சொல்லி விளங்கவைத்து நம்முடன் 'ததாஸ்து' சொல்லும்படி செய்யவேண்டும்.

ஐயா, தயவு செய்து மறுபடியும் உங்கள் கண்ணை மூடிக்கொள்ளுங்கள். மூடிக்கொண் டாய் விட்டதா? சரி, இப்போது கொஞ்சம் மறுபடியும் கற்பனை செய்யுங்கள். ஆம். ஆபா ஸப் படங்கள் இல்லையானால் அந்தத் தொழி லில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லோருடைய கதியும் என்னவாகுமென்று......


இப்படிச் சிந்திக்கும்போது பல கொடிய தோற்றங்கள் நிகழ்வதில் ஆச்சர்யமில்லை.

ஆனால் இதற்கெல்லாம் பயப்படாமல் கண் ருவிப் படத் தொழிலை மூடி அதில் சம்பந்தப் பட்டிருப்பவர்களையெல்லாம் வெளியேற்று கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அத் தனை ஆசாமிகளும் என்ன செய்வார்கள். பாவம்! பிச்சையெடுக்க வேண்டியது தான். வேறு வேலை செய்து பிழைக்க அவர்களுக் குச் சக்தி இல்லை. உலகத்தில் ஒரு வேலைக் கும் அவர்கள் லாயக்கில்லாமல் இருந்த போதி லும் ஆபாஸப் படத்தொழில் மட்டும் அவர் கள் குற்றங்களை மன்னித்து அவர்களைக் காப் பாற்றி வந்திருக்கிறது. இப்படியிருக்கும் போது, இந்த ஆசாமிகள் சார்பாக இப்படத் தொழிலுக்கு நன்றி செலுத்தி அதை நிலை பெறச் செய்ய வேண்டாமா?

'வேண்டாம்' என்று இன்னமும் சொல் வீர்களானால், இதோ வரப்போக விருக்கும் ஆபத்தைப் பற்றி முன்னதாகவே எச்சரித்து விடுகிறேன். மேற்சொன்ன ஒரு வேலைக்கும் லாயக்கற்ற பெரும்பான்மை ஆபாஸப்படத் தொழிலாளிகளைத் தவிற, ஆபாஸப்பட முத லாளிகள் என்ற சிறுபான்மையோரைப்பற்றி நீங்கள் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறீர் களா? இந்தச் சிறுபான்மையோர் தங்கள் தொழிலை இழந்ததும் என்ன செய்வார்கள்; எல்லாம் செய்வார்கள். ஆபாஸப் படங் களையே இவர்கள் தயாரித்து போதுமான அனுபவம் பெற்றிருக்கிறார்க ளாகையால் மற்ற குற்றங்களையெல்லாம் மிகவும் ஊக் கமாகவும் வேகமாகவும் செய்வார்கள். அதனால் தேசத்தில் நாம் காலந்தள்ளுவது கஷ்டமாய்ப் போய்விடுமல்லவா? அந்தக் கஷ்டங்களை எல்லாம் நினைக்கும்போது பயங் கர நினைவுகள் தோன்றி நம்மை மூர்ச்சை யடையச் செய்கின்றன.

ஆகையால் ஆபாஸப் படங்கள் இந்த ஆபத்துக்களை யெல்லாம் வராமல் தடுத்து நிற்பதால், நாம் அதற்கு நன்றி செலுத்த வேண்டியதிருக்க, ஒழிக்க வேண்டும் என்று சொல்லுவது எவ்வளவு நன்றியற்ற பேச்சு! இருந்தாலும் நாம் ரொம்பப் பொல்லாத வர்கள்!


ஆபாஸப் படங்கள் இல்லாவிட்டால் வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகமாகுமென்றும், அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் உண் டாகுமென்றும் தெளிவாகி விட்டது. இப் போது, அவைகள் இருப்பதால் உண்டாகும் உபயோகங்களையும் ஏற்படும் நன்மைகளையும் நாம் அலசிப் பார்த்து விட்டால், நம்மைப் படைத்த கடவுள் பேரிலேயே நமக்குக் கெட்ட கோபம் உண்டாகிவிடும். "அப்பனே! எங்களையும் இந்த உலகத்தையும் படைத் தாயே. இவ்வளவு உபயோகமான ஆபாஸப் படத்தையும் ஏன் அப்பொழுதே படைக்க வில்லை?" என்று கோபிக்க ஆரம்பித்து விடு வோம்.



மாலபில்லாவில் ஓர் காட்சி.



பிரேம்சாகர் என்ற ஹிந்தி படத்தில் ஓர் காட்சி.



சியாம சுந்தரில் ஓர் காட்சி.